UNIVERSITY OF ... SRI L...
RECEIVED
-2-1986

வி॑லை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 25 | ஜ, அவ் 27 | இதழ் 361
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 7-2-1986

## ‘இலங்கைத்தீவிரவாதிகளிடம் ரஷ்ய ஆயுதங்க்ள் கிடையாது!’

### — ரஷ்யத் தூதுவர்

[கொழும்பு]

‘‘இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு ஏற்படுமென சோவியத் யூனியன் நம்புகிறது. தீவிரவாதிகளிடம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் உள்ளன என்ற கூற்றையும் ரஷ்யா மறுக்கின்றது.’’

இவ்வாறு ரஷ்யத் தூதரகத்தில் நேற்றுக்காலை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ரஷ்ய தூதுவர் கே. என். புல்மோடவ் குறிப்பிட்டார்.

தீவிரவாதிகளிடமிருந்துகைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை அல்ல என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் சோவியத் யூனியன், இலங்கையில் எந்தவிதமான பயங்கரவாத நடவடிக்கையையும் முற்றாக எதிர்ப்பதாகவும் தூது

[5ம் பக்கம் பார்க்க]

## ● தமிழகம் சென்ற முன்னாள் எம். பி.

# கணேசலிங்கம் காலமானார்.

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பட்டிருப்பு எம். பி, பூ. கணேசலிங்கம் (49 வயது) நேற்று காலமானார். தகனக்கிரியைகள் மட்டக்களப்பில் நடைபெறும்

இருதய நோய் காரணமாக சென்னை தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கம். திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் மருத்துவமனை சென்று தமது அஞ்சலியைச் செலுத்திக்கொண்டனர்

1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர் கட்சியின் வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் நலனுக்கும் அயராது உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது இவருக்கு இரு புதல்வர்கள் உள்ளனர்.

சென்னையிலிருந்து நேற்றிரவு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி அமரர் கணேசலிங்கத்தின் பூதவுடலை மட்டக்களப்புக்கு கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும், இன்று அல்லது நாளைக்காலை பூதவுடல்மட்டக்களப்புக்கு கொண்டுவரப்படுமென்றும் தகனக்கிரியைகள் மட்டக்களப்பில் நடைபெறும் என்றும் தெரியவருகிறது,

## தமிழர் கூட்டணி பொலிட்பீரோ அறிக்கை

(சென்னை)

‘‘இலங்கை அரசின் கடுமையான போக்கும், தமிழ்மக்கள் மீதானஅதனதுஅதிகரித்ததாக்குதல்களும் தனிநாடு அமைப்பதன் மூலமே இலங்கைத்தமிழர்களின் பாதுகாப்பைஉத்தரவாதப்படுத்த முடியும் என்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் நிலைபாட்டினை நியாயப்படுத்துவதாக அமைகிறது’’ என்று த. வி, கூட்டணியின் ‘பொலிட்பீரோ’ சென்னையில் நேற்று விடுத்த அறிக்கையொன்று கூறுகின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு இ.தொ.கா. ரூ. 10 லட்சம் நிதி உதவி

[கொழும்பு]

மலையகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ், சிங்கள அகதிகளுக்கு மொத்தம் பத்து லட்சம் ரூபாய் இ. தொ. கா. அதன் சொந்த நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கும்

தமிழ் அகதிகளுக்கு ஐந்து லட்சம் ரூபாவும், சிங்கள அகதிகளுக்கு ஐந்து லட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

இதே வேளையில் அரசபெருந்தோட்ட நிதியிலிருந்தும் அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்கள் இன்று வேலைக்குத் திரும்புவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹெலிக்கொப்டர் சூடு: நால்வர் காயம்

[உருத்திரபுரம்)

வயலில் அறுவடைசெய்துகொண்டிருந்தவர்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் நால்வர் காயமடைந்துள்ளனர்.

உருத்திரபுரம் பகுதியில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து வயல்களில் விளைந்தநெல்லை அறு

[5ம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் பஸ்கள் ஓடவில்லை! பஸ் சாரதிகள் விசாரணை

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் நேற்று முழுநாளும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள்எதுவுமே சேவையிலீடுபடுத்தப்படவில்லை

மன்னார் இ. போ. ச. டிப்போவில் பஸ்சாரதியாக கடமையாற்றிய நீர்கொழும்பைச் சேர்ந்த எட்வின் என்பவர் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

ஆயுதப்படையினர் நேற்று இறந்தவருக்கு அனுதாபம் தெரிவிக்கும்முகமாகமன்னாரில் இ. போ. பஸ்கள் எதுவும் ஓடக்கூடாதென்று பணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனைத்தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் இ. போ. ச. பஸ்கள் எதுவும் சேவையிலீடுபடவில்லை.

அதேசமயம் நேற்று நண்பகல் 12 மணியளவில் இ போ. ச டிப்போவுக்குள் சென்ற இராணுவத்தினர் பல பஸ் சாரதிகளை விசாரணைக்காக கொண்டுசென்றனர். இதுசம்பந்தமாக சிலமுக்கிய பிரமுகர்கள், இராணுவ அதிகாரியுடன் தொடர்புகொண்டதன் பேரில் பிற்பகல் 5-30மணியளவில் விசாரணையின்பின் சாரதிகள் விடுவிக்கப்பட்டனர். (மா)

## பருத்தித்துறை நேற்று இயங்கவில்லை

(புலோலி நிருபர் ஏ. என். எஸ், திருச்செல்வம்)

பருத்தித்துறை இராணுவ முகாம் பகுதியிலிருந்தும், கடல் பகுதியிலிருந்தும் கடந்த புதன்கிழமை பிற்பகல் நடத்தப்பட்ட ஷெல், பீரங்கித் தாக்குதல்களைத் தொடர்ந்து பருத்தித்துறை நகரை அண்மித்த கிராமப் பகுதிகளில் வந்து விழுந்த குண்டுகளும், வேட்டுகளும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

தம்பசிட்டி, வாணக்குடியிருப்பு, அல்வாய், மாதனை, தும்பளை, கற்கோவளம் பகுதிகளில் விழுந்தகுண்டுகளாலும், வேட்டுக்களாலும் பல வீடுகள் சேதப் படுத்தப்பட்டுள்ளன. பல கால்நடைகள் இறந்துள்ளன. பலர் காயங்களுக்குள்ளாகினர்.

பருத்தித்துறையில் தொடர்

(5-ம் பக்கம் பார்க்க)

## மஹர எம். பி.க்கு துப்பாக்கிச்சூடு!

]கொழும்பு]

மஹர தொகுதியின் ஐ தே. க. எம் பி. திரு. கமலவர்ம ஜெயக்கொடி கனேமுல்லையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

கனேமுல்லையில் உள்ள இராணுவ கமாண்டோ பயிற்சி முகாமுக்கு எதிரிலுள்ள வீதி வழியாக திரு. ஜெயக்கொடி சென்றுகொண்டிருந்த வாகனத்தைநிறுத்துமாறுசமிக்ஞை செய்யப்பட்டும், சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்ற வேளையிலேயே, இராணுவத்தி

(5-ம் பக்கம் பார்க்க)

## பாப்பரசருக்கு பக்திபூர்வமான வரவேற்பு! தமிழிலும் சில வார்த்தைகள் பேசினார்

(சென்னை)

சென்னைக்கு நேற்றுமுன்தினம் விஜயம்செய்த பரிசுத்த பாப்பரசர் அருளப்பர் சின்னப்பருக்கு தமிழ்நாடு மக்கள் சிறந்த - பக்திபூர்வமான வரவேற்பை அளித்தார்கள்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தடைந்த பரிசுத்தபாப்பரசரை ஆளுநர் திரு. எஸ். எல். குரானாவும் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனும் மல்லிகைட பூ மாலை சூட்டிவரவேற்றார்கள்.

சென்னை கடற்கரையில் விசேடமாக அமைக்கப்பட்ட பிரமாண்டமான அலங்கார மேடையில் பாப்பரசரினால் நிறைவேற்றப்பட்ட திருப்பலிப்பூசையைத் தரிசிப்பதற்காக தமிழ்நாட்டின் ஏனைய

(5-ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தோர் யாழ்ஆஸ்பத்திரியில்அனுமதி

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறைப் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்களுக்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மூன்றுபெண்கள் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் திருமதி ஞானப்பு (வயது 47) பருத்தித்துறை, செல்வி ஜெயந்தி (10 வயது) பருத்தித்துறை, திருமதி சிவகாமசுந்தரி (வயது 50) பருத்தித்துறை,

(5-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் நேற்றும் இரு இளைஞர் சூட்டுக்குப் பலி!

(புலோலி)

பருத்தித்துறை நகரில் நேற்றுக்காலையும் இரு இளைஞர்கள் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானார்கள்.

நேற்றுக்காலை பத்தரை மணியளவில் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்திற்கு அருகாமையில் கல்லூரி வீதியில் வைத்தே இவ்விரு இளைஞர்களும் துப்பாக்கிச் சூட்டிற்குஇலக்காகினர். இருவரும் ஸ்தலத்திலேயே மரணமாகினர்.

## வவனியாவில் கண்ணிவெடி: பரவலாக ஹெலிகொப்டர் தாக்குதல்; இருவர் பலி!

(வவனியா)

வவனியாவிலிருந்து மன்னார் செல்லும் வீதியில் நேற்றுக்காலை கண்ணிவெடியொன்று வெடித்ததையடுத்து ராணுவத்தினர் ஹெலிகொப்டர் மூலம் பல இடங்களில் துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர்.

வவனியாவில் நேற்று இ... பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்,

வவனியா 6ம் மைல் கட்டையில் வைத்து கமத்தொழில் சேவை நிலையங்கள் இலாகாவின்தொழில்நுட்ப உத்தியோகஸ்தரான பிரேமனந்தா (வயது 42) என்பவரும், கல்மடு என்ற இடத்தில் வயலில் காவல் வேலையில் ஈடுபட்டிருந்த ஜேசுதாஸன் என்பவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காயினர்

நேற்று அதிகாலை ராணுவத்தினர் ஆறு டிரக்குகளில் பூவரசங்குளம் நோக்கிச் சென்றனர். அங்கிருந்து திரும்பி வரு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஹொண்டா (Honda) ஜெனரேட்டர் 1500 வாட்ஸ் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சொனிக்ஸ் மினிசினிமா, 95, யாழ் வீதி, மானிப்பாய். (C 606)

மின்சாரம், கிணறு சகல வசதிகளும் உள்ள வீடு வளவு இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முன்னுக்கு வாகனங்கள் விடவும் இடமுண்டு. பின்னுக்கும் வீடு கட்டக்கூடிய இடவசதியுண்டு. தொடர்பு; 136, முஸ்லீம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (C603)

சொந்தப் பாவிப்பிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர், சன்யோ றேடியோ Stereo மொடல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: துரையப்பா, பருத்தித்துறைவீதி, இலங்கை நாயகி அம்மன்கோவிலடி, நல்லூர் வடக்கு. (C604)

வெளிநாடு செல்லும் டாக்டர் ஒருவரின் வீட்டுத் தளபாடங்கள், Writing table, மேசைகள். கட்டில்கள், Hoover floor polishers, Sanyo மின் விசிறிகள், Pyrex வெளிநாட்டு கிளாஸ் வகைகள், வெளிநாட்டு சாய்வு நாற்காலிகள், றெக்கோட் பிளேயர், கம்பளங்கள், துணிவகைகள், மற்றும் பல பொருட்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பத்மநாதன், C/o அம்பலவாணர், ஆடியபாதம் றோட். திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்கும் இடையில். (C 607)

புத்தம்புதியனவைBoshகுளிர் சாதனப்பெட்டி 16 சதுர அடி 14,500/-, SHARP Double Cassette ரூ இன் வண் ரூ. 4,500/-, Hitachi twin tub சலவை இயந்திரம் with drier ரூ. 7 500/ விளம்பர இலக்கம் C 609, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 609)

பண்ணை பன்றி இறைச்சி வரணிப் பண்ணையில் வளர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: (1) வரணிமிஷன் விற்பனைநிலையம் நவீனசந்தை, யாழ்ப்பாணம், (2) மிஷன் விற்பனை நிலையம் இணுவில். (3) மிஷன் விற்பனை நிலையம் தெல்லிப்பழை. (C 612)

றெக்கோடிங் பார்களுக்குத் தேவையான புதிய, பழைய திரைப்பட இசைத்தட்டுக்கள் புத்தம் புதியவை விற்பனைக்குண்டு. த. ஸ்ரீரங்கன், 'சத்தியபதி', ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பளை. [C 575]

## வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ அன்ட் ரீ. வி., மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு:-VispaEngineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 578

## தேவை

கைக்கடிகாரம் மேசைமணிக்கூடுகள் திருத்துவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சம்பள விபரம் நேரில் தொடர்பு கொள்ளவும். தேவன் வோர்ச் வேக்ஸ், பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம். C-547

அலுமினியப் பாத்திரம் போடுபவர், உதவியாளர், பயிலுனர் தேவை. நேரில் வரவும். தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C605)

ரபர் ஸ்டாம்பு தயாரிப்பதில் சகல பகுதிகளையும் தனித்து செய்யக்கூடிய ஒருவரும், பயிற்சியாளர்களும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: ஏகாம்பரநாதன், 180, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [C589)

### WANTED

Wanted an English / Tamil Typist to work part time. Knowledge in Short - hand preferred. Apply; Advt. No. A 194, C/o Eelanadu, Jaffna. (A 194)

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

திருநெல்வேலி, மணற்தறை ஒழுங்கை, காலம் சென்ற பண்டாரம் தம்பிப்பிள்ளை சண்முகநாதன் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3931

பி. ரி. சண்முகநாதன் கைம்பெண் இராசம்மா, இல. 6, மணற்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

- மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C529)

## தொழிலாளருக்கு காப்புறுதி

[கொழும்பு]

சுமார் 15லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள் என்றுகப்பல் போக்குவரத்து வர்த்தக அமைச்சர் அமரசிறி தெரிவித்துள்ளார்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன் Y S.NETIBAN
(வை. எஸ். நிதிபன்)

கொழும்புத்துறையைச் சேர்ந்த K. V. V. Y. Sathinathan [கே. வி. வி. வை. சத்திநாதன்] சாந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் Y. S.Netiban தனது முதலாவது பிறந்த நாளை 7-2-1986 வெள்ளிக்கிழமை வண்ணார்பண்ணையில் மிக எளிமையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, பூட்டி மற்றும் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கணபதி அருளால் வல்லவனாகவும், நல்லவனாகவும், ஒழுக்கத்துடனும், பண்புடனும் பல கலைகளையும் கற்று செல்வத்துடனும் நலமுடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

இவரை அப்பா அதிர்ஷ்ட விஞ்ஞானக்கலையில் நிபுணனாகி அக்கலைமூலம் இவரும் எல்லோரும் வளம்பெற்று நலமுடன் வாழ எல்லாம்வல்ல கணபதியை வேண்டுகின்றார்.

பழைய இல. 70,
சிவன்பண்ணை வீதி,
வண்ணார்பண்ணை. (C610)

## வட பிராந்திய போக்குவரத்துச் சபை பழுதடைந்த ரயர் விற்பனை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் உள்ள 465 பழுதடைந்த ரயர்களை விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பபத்திரங்களை 1986-02-14-ந் திகதிக்கு முன்னர் தலைவர், கேள்விப் பத்திரச்சபை, வட பிராந்திய போக்குவரத்துச்சபை, கோண்டாவில் சாலை என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

ரயர்களை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணம் சாலை அதிபரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

சி. கனகரத்தினம்,
தலைவர்/தகவுடை அதிகாரி,
வட பிராந்திய
போக்குவரத்துச் சபை,
பலாலி வீதி,
கோண்டாவில்.
[A 202]

## மீண்டும் கைது

[வவனியா]

ஆயுதப்படையிருடைய பாதுகாப்பிலிருந்து தப்பிஓடியவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு, அவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

இறம்பைக்குளம் வில்லியம் ஜுட் நிரஞ்சன் என்ற இளைஞரே மீண்டும் கைதுசெய்யப்பட்டவராவார். இவர் முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

## தினசரி சோதனை

(வவனியா)

தீவிரவாதிகளைத் தேடி, வவனியா நகரில் சீருடையில் ஆயுதம் சகிதம் வாகனங்களில் ஆயுதப்படையினர் வருவது இப்பொழுது தினசரி நிகழ்ச்சியாகிவிட்டது.

யாழ்.வீதி மன்னார் வீதி சந்தியில் கவசவாகனங்கள் சகிதம் இராணுவ - கமாண்டோ பொலிசார் தினமும் தரித்து நின்று சோதனையினை நடத்துகின்றனர்.

## அதிபர் நியமனம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி கனிஷ்ட அதிபராக திரு. க பூபாலபிள்ளை நியமனம் பெற்றுள்ளார். முன்னைய அதிபர் கே. எஸ். பொன்னையா கல்வி வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலய அதிபராகஇடமாறம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந் நியமனம் நடைபெற்றது.

## சனசமூகநிலையம் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

புதுமைமாதா சனசமூக நிலையம், பெருநாளை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்திலுள்ள அகதிகளுக்கென ஒரு மூடை அரிசி, சீனி, தேங்காய் உட்பட பல்வேறு உணவுப் பொருட்களை அன்பளிப்பு செய்தது.

அத்துடன் அன்றைய தினம் மதியபோசனம் வழங்கியதுடன் இரண்டாயிரம் பணிசுகளையும் பகிர்ந்தளித்தது. (ச)

## துயர் நீங்க சாந்தி யாகம்

[வண்ணார்பண்ணை]

துன்பப்படும் தமிழ்மக்களின் துயர்கள் இன்னல் தீரவேண்டி கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டச் சைவச்சிறுவர் 24 மணிநேர அகண்ட நாமபஜனையை இக்கோட்டத்தில் உள்ள ஸ்ரீ சாந்தலிங்கப்பெருமான் முன் மேற் கொண்டனர்.

வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமான இந்தப் பஜனையில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கலந்துகொண்டனர். நல்லை ஆதீன சுவாமிகள் ஆசியுரையுடன் சனிக்கிழமை மாலை இந்த நிகழ்ச்சி நிறைவு பெற்றது. இதைத் தொடர்ந்து சுப்பிரமுனிய கோட்டச் சிறுவர்களால் நடாத்தப்படும் ''ஸ்ரீ சாந்தியாகம்'' பிரம்மஸ்ரீ சாம்கணேசக் குருக்களின் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறுகிறது. இந்தயாகத்திற்கான உபய உதவிகளை சர்வோதய வெளிக்கள இயக்குநர் திரு. க. கதிரமலை செய்துள்ளார்.

## வாகனங்களுக்கு தகுதிச்சான்றிதழ் வழங்கல்

Issue of Fitness Certificates

வாகனங்களைப் பரிசோதித்து தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அதிகாரபூர்வமாக நாங்கள் நியமிக்கப்பட்டுள்ளோம். வருடாந்த அனுமதிப் பத்திரம் பெறும்பொருட்டு தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கு அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்க.

**டைனமிக் எஞ்ஜினியறிங் லிமிற்றெட்**

476, பிரதான வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
(A 204

## trust travel service

11-A, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்.
T. P. 24111

தலைமையகம்:
65, சதாம் வீதி,
கொழும்பு - 1.

★ உங்கள் வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான டிக்கட்டுகளை விசேட கழிவுகளுடன் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

★ ஏரோபுளட் C. P. எயர் - எயர்லங்கா விமான கம்பனிகளின் டிக்கட்டுகளை விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

★ கொழும்பு / லண்டன் - 8500/-
கொழும்பு / நோர்வே - 10750/-
கொழும்பு / திருச்சி - 1148/-
கொழும்பு / மட்றுஸ் - 1624/-

(A 201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸில் இன்று ஜனாதிபதித் தேர்தல்!

(மணிலா)

''பிலிப்பைன்ஸில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல்களில் மோசடியெதுவும் நடந்து கொந்தளிப்புநிலை உருவாகுமேயானல் ஆட்சியை இராணுவம் கைப்பற்ற அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று முன்னாள் அமெரிக்க அட்டர்னி ஜெனரலான ராம்சே கிளார்க் மணிலாவில் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

பிலிப்பைன்ஸில் ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இதில் தற்போதைய ஜனாதிபதி மார்க்கோஸும், திருமதி கோரி அகியூனேவும் போட்டியிடுகின்றனர்.

இதனிடையே இத்தேர்தல்கள் நேர்மையான முறையில் நடைபெறுவதைக் கண்காணிக்க அமெரிக்க உயர்மட்டக் குழுவொன்று மணிலா வந்து சேர்ந்துள்ளது.

அமெரிக்க செனட்சபையின் வெளியுறவுக் கமிட்டியின் தலைவரான செனட்டர் றிச்சார்ட் லூகர் தலைமை தாங்கும் இக்குழுவில் 20 பேர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி றீகனும் இத்தேர்தல்கள் மோசடி எதுவுமின்றி நடக்குமானல் பிலிப்பீன்சுக்கான இராணுவ பொருளாதார உதவிகள் அதிகரிக்கப்படும் என உறுதியளித்தார்.

பிலிப்பீன்ஸில் அமெரிக்காவின் ஒரு விமானப்படைத் தளமும், கடற்படைத் தளமும் இருப்பதனல் அமெரிக்கா இத்தேர்தல்களின் முடிவில் அதிக அக்கறை காட்டுகிறது. (செ)

## பாப்பரசர் விஜயம் 65 அடி உயர 'கட் அவுட்'

[சென்னை]

பாப்பரசரின் சென்னை விஜயத்தையொட்டி அறுபத்தைந்து அடி உயரமான பாப்பரசரின் 'கட் அவுட்' அண்ணா சாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாட்டை வி. ஐ. பி. சகோதரர்கள் செய்திருந்தனர். இவற்றை விட 25அலங்கார வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பாப்பரசர் சர்வமதத்தலைவர்களை ராஜாஜி மண்டபத்தில் சந்தித்தார். மரீனக் கடற்கரையில் பல லட்சம் மக்களுக்குத் தரிசனம் வழங்கினர். 8, 9, 10ம் திகதிகளில் ராஜஸ்தான், கல்கத்தா ஆகிய மாநிலங்களுக்குப் பாப்பரசர் விஜயம் செய்வார். (கெ)

## ராஜ்நாராயணன் சாமி வேடம்

[புதுடில்லி

முன்னாள் இந்திய அமைச்சர் ராஜ்நாராயணன் விரைவில் சினிமாவில் நடிக்கவுள்ளார்.

அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் இந்திப் படமான ''மாரவனு'' வில் ராஜ்நாராயணன் சாமி வேடம் பூண்டு நடிக்கவுள்ளார். (கெ)

## தூத்துக்குடியில் 1000 வீடுகள்

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்தியா திரும்புவோருக்கு தூத்துக்குடி மாப்பிள்ளை ஊரணியில் ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவு முழுவதையும் இந்திய மத்திய அரசு பொறுப்பேற்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

## வணக்கத்தலம் தீக்கிரை

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியரின் வணக்கத்தலம் ஒன்று எரிக்கப்பட்டுள்ளது.

இந்துக்களுக்கும் சீக்கியருக்கும் இடையே நடைபெற்ற மோதலின் போது இவ்வாறு நடந்ததாக கூறப்படுகிறது.

இந்தக் குழப்பத்தையடுத்து பஞ்சாப் முதலமைச்சர் குர்ஷித்சிங் பர்னலா தனது டில்லி விஜயத்தை ஒத்திவைத்துள்ளார். உடனடியாக நிதியமைச்சரை பிரச்னை நடந்த இடத்துக்கு விஜயம் செய்யும்படி அவர் கோரியுள்ளார். (ச)

## கோஸ்டா ரிக்காவில் புதிய ஜனாதிபதி!

(லண்டன்)

தென் அமெரிக்க நாடான கோஸ்டா ரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஒஸ்கார் ஏரியாஸ் தெரிவாகியுள்ளார்.

44 வயதுடைய திரு. ஏரியாஸ் மொத்த வாக்குகளில் 52 வீதத்தைப் பெற்றதன் மூலம் கிறிஸ்தவ கழக ஐக்கிய கட்சியின் வேட்பாளரான திரு. கல்டேரோனைத் தோற்கடித்துள்ளார்.

பொருளாதார நிபுணரான திரு. ஏரியாஸ், ஆளும் கட்சியான தேசிய விடுதலைக் கட்சியைச் சேர்ந்தவர். இவர் இவ்வருடம் மே மாதம் பதவியேற்பார். (சே)

## ஓமானில் திருமணக் கட்டுப்பாடு

[மஸ்கட்]

ஓமான் பிரஜைகள் வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்வதற்கு அந்நாட்டரசு தடை விதித்துள்ளது.

இந்தப் புதிய சட்டவிதிகளை மீறுவோர் குடியுரிமையை இழக்க நேரிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓமானில் சுமார் மூன்றுலட்சம் வெளிநாட்டவர்கள் வேலை செய்து வருகிறார்கள். வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்வதற்குத் தடை விதித்த முதலாவது வளைகுடா நாடு ஓமானகும். [த]

# சிலியில் விமான விபத்து: 8 பேர் மரணம்

(லண்டன்)

தென்னமெரிக்க நாடான சிலியில் விமானமொன்று மலைகளுடன் மோதியதால் விமான ஓட்டிகள், உட்பட எட்டுப் பேர் மரணமானர்கள்;

சிலி நாட்டின் பரா துருப்புகளுக்குச் சொந்தமான இந்த 'பைப்பர் நவாஜோ' விமானம் தென் சிலிய மலைப் பிரதேசமான கொய்ஹாய் கூவில் மோதியது. விமானத்தில் அமெரிக்கக் கம்பனியொன்றின் உயரதிகாரிகள் அறுவர் பயணம் செய்தனரென்றும் இவர்களனைவரும் மரணமானர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிலியில் அமெரிக்கர்கள் விமானவிபத்தில் சிக்கியது இவ்வருடத்தில் இது இரண்டாவது தடவையாகும்.

புது வருடத்தன்று சிலியின் அன்டார்ட்டிக்காப் பிரதேசத்தில் தரையிறங்க முயன்ற விமானமொன்று விபத்துக்குள்ளாகியதால் அதில் இருந்த எட்டு அமெரிக்க உல்லாசப் பயணிகளும் மரணமானர்கள். (செ)

## சனசமூக நிலையங்கள் பதிவுசெய்து கொள்ளவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்படாதிருக்கும் சனசமூக நிலையங்களை உடனடியாகப் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச பொதுச்செயலாளர் திரு எஸ். எஸ் வரதராசா வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வரும் பல சனசமூக நிலையங்கள் பல வருடகாலமாகியும் இதுவரை பதிவு செய்யப்படாது இருப்பதால் அத்தகைய சன சமூக நிலையங்கள் அரச நன்கொடையை பெறும் வாய்ப்பை இழக்கும் தறுவாயிலுள்ளதாக தெரிவித்த அவர் அரச நன்கொடைகள் யாவும் அரசினல் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் பதிவு செய்யாத சனசமூக நிலையங்கள் உடனடியாக பதிவு செய்து அரச நன்கொடையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

'அ' பிரிவு சன சமூக நிலையங்களுக்கு அரச நனகொடையாக 600 ரூபாவும், 'ஆ' பிரிவு சனசமூக நிலையங்களுக்கு 300 ரூபாவும் யாழ். அபிவிருத்தி சபை உபஅலுவலகங்கள் மூலம் வழங்கப்படுவதாகவும் இது வரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு உரிய கவனங்களை காட்டும் பட்சத்தில் அவற்றை பெறுவதற்கேற்ற ஒழுங்குகளை செய்து தருவதாகவும் உறுதி அளித்துள்ளார். (ச)

# "எமது மொழி, கலை, கலாசாரம் அழிந்துவிட்டால் தமிழனின் வரலாறு மறைந்துவிடும்"

[கிளிநொச்சி]

'எந்த இடர்வரினும் தமிழ் மக்களது கலை, கலாசாரம், பாரம்பரியங்கள் அழியவிடாது பேணிப்பாதுகாக்க வேண்டும். இந்த நோக்கத்தை நிறைவு செய்யவே நீர்ப்பாசன திணைக்கள தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் பாடுபட்டுவருகிறது''

இவ்வாறு கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்கள தமிழ் பண்பாட்டுக்கழகத்தின் 'பேரருவி' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் கிளிநொச்சி பிரதேச பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. சிவகுருநாதன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழா திரு. சி. சிவானந்தராசாவின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகியது. பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் திரு.ம. சபாரத்தினம் ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தார். பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம் மன்சூர் பேசுகையில் கூறியதாவது

''கிளிநொச்சி மாவட்டத்தில் பல திணைக்களங்கள் இருந்தபோதும் தமிழை வளர்ப்பதில் கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களத்தினர் அரும்பாடுபட்டு வருவது பெருமிதமாகவுள்ளது. இவர்களது தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் தலைசிறந்த புத்தகங்களை வெளியிட்டு வெளியீட்டுத் துறையிலும் முன்னேடிகளாகத்திகழ்கின்றனர் அதுமட்டுமல்லாது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பலவிதசேவைகளை ஆற்றி வருவது என்னை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியுள்ளது'' என்றார்.

எழுத்தாளரும் 'பேரருவி' சஞ்சிகையின் ஆசிரியருமான கோப்பாய் சிவம் பேசுகையில்; இன்றைய சூழ்நிலையில் இவ்வாறன விழாக்கள் நடைபெறலாமா என்ற கேள்வி எழலாம், எமது மொழியும் கலைகலாசாரமும் அழிந்துவிட்டால் தமிழனதுவரலாறே அற்றுப்போய்விடும். இதைக் கருத்தில் கொண்டே இன்றைய சூழ்நிலைக்கு அனுசரித்து எளிமையான முறையில் வெளியீடுகளையும் விழாக்களையும் நடத்துகிறோம். இதற்கு பல விதத்திலும் உதவி வரும் கிளிநொச்சி வாழ் மக்களுக்கு என்றும் நன்றியுடையோம்'' என்றார்.

சஞ்சிகைக்கான ஆய்வுரைகளை கல்வியதிகாரி கே.கே சோமசுந்தரமும், விலைக்கட்டுப்பாட்டதிகாரியும் கலைஞருமான கே. கே. மதிவதனன் ஆகியோர் நிகழ்த்தினர்கள். நீர்ப்பாசன பொறியியலாளர் ஏ சி. விஜேதராஜ் நன்றியுரையாற்றினர், கனிஷ்ட வித்தியாலய மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

## பயிற்சி வகுப்பு

(வவனியா)

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் இளம் யுவதிகளுக்கான ஆறுமாத தையல் பயிற்சி வகுப்பின் முதல் தொகுதி மாணவர்களுடைய பயிற்சிநெறி முடிவடைந்துள்ளது. இவர்களுக்கான சான்றிதழ்கள் வைபவ ரீதியாக வழங்கப்பட்டது.

கல்விப்பணிப்பாளர் திரு இ. முருகையன் சான்றிதழ்களை வழங்கினர். அத்துடன் இம் மாணவர்களின் தையல் உடை அலங்கார கண்காட்சி ஒன்றும் இடம்பெற்றது.

வைபவத்தில் பாடசாலை அதிபர் திரு. எஸ். தர்மதேவன், வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வி கே. நாகராஜா, முன்னாள் அதிபர் திரு. பி. கனகரத்தினம் ஆகியோரும் பேசினர்ககள்.

## "பரிசுத்தமான இடங்களில் மிருக பலி கூடாது!"

(கொக்குவில்)

கொக்குவில் கற்புலத்து மனேன்மணி அம்பாள் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் க தருமலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கொக்குவில் கிராமசபை எல்லைக்குள் பல சைவ ஆலயங்கள் இருக்கின்றன. இத்தகைய பரிசுத்தமான இடங்களின் அயலில் மிருகபலி இட்டு வியாபாரம் நடைபெறும் கடைகள் இருக்கக் கூடாது. அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று கோரும் பிரேரணை நிறைவேறியது. சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பண்ணிசை வகுப்புக்கு இன்னும் மேலதிக மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

புதுவருட நிர்வாகிகள் வருமாறு; தலைவர் க. தருமலிங்கம், உப தலைவர்கள் இ.பொ. குமாரசுவாமி, அ. சரவணமுத்து, செயலாளர் ஆ சுப்பிரமணியம், உப செயலாளர் சி மாதவகுமார், பொருளாளர் சி. திருநாவுக்கரசு உபபொருளாளர் செ. இராசலிங்கம்பதினன்கு உறுப்பினர்கள் நிர்வாக உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## இந்திரா கொலை வழக்கு

(புதுடில்லி)

இந்திராகாந்தி கொலை வழக்கில் மூன்று எதிரிகளுக்கும் மரணதண்டனை வழங்குகையில் நீதிபதி மகேஷ் சந்திரா, சட்டத்துக்குப்புறம்பான வகையில் நடந்து கொண்டார் என்று டில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட இருவரின் மேன்முறையீட்டை விசாரித்த இருநீதிபதிகளைக் கொண்ட குழுவொன்றே இம்முடிவைக் கூறியுள்ளது.

கைதிகளை தனிமைச் சிறைகளில் வைக்க வேண்டாமென்றும், குளிர் பாதுகாப்பு உடைகளை அளிக்குமாறும், இரவு வேளைகளில் அதிக வெளிச்சமுடைய விளக்குகளை அவர்களை நோக்கி வைப்பதை நிறுத்துமாறும் நீதிபதிகுழு, டில்லி சிறையதிகாரிகளைக் கேட்டுள்ளது. (கெ-செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

—குறள்

## நமது நோக்கு

## துர்க்காபுரத்தில் ஒரு சைவ மகளிர் இல்லம்

அநாதரவுற்றவர்களை அதிலும், அநாதரவான சிறுவர்களைப் பேணுவதும், அவர்களின் வளர்ச்சிக்குதவுவதும் மாபெரும் புண்ணியம்.

சுயநலநோக்கமின்றி இம்மாதிரி காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் குறைவு. அதிலும் கூட வசதியும் வாய்ப்பும் உள்ள இந்து கோவில்களின் நிர்வாகிகள் பொதுவில் இப்படியான விடயங்களில் கவனமே செலுத்துவதில்லை.

கோயில் தர்மச் சொத்துக்களைக்கொண்டு கோயில்களின் அன்றாட சமயக் கைங்கரியங்களை மட்டும் சிறப்புறச் செய்துகொண்டிருந்துவிடுகிறார்கள் இவர்கள். இன்னும் சிலர், இருக்கும் அமைப்புக்களை வருடத்துக்கு வருடம் உடைத்துக் கட்டி அலங்கரித்துக்கொண்டிருக்கிறார்கள். அபரிமிதமாகக்கிடைக்கும் வருமானங்களின் ஒருபகுதியை அநாதைகளுக்கும், அறிவில்லாத ஏழைகளுக்கும் பயன்படும் வகையில் பயன்படுத்துவதோ அன்றில் அன்றாடம் செய்யவேண்டிய பூஜைகளைக்கூட நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ள சிறு கோயில்களின் வளர்ச்சிக்கு உதவுவதோ இவர்களுக்கு ஒவ்வாத காரியம்.

இன்றைய இளைஞர் சமுதாயம் கோயில்களையும் கோயில் நிர்வாகங்களையும் பார்த்து முகம் சுளிப்பதற்கு மேற்படி நிலைமைகளும் காரணமெனலாம்.

கோயில் சமூகத்தையும், சமூகம் கோயிலையும் பற்றி நிற்கவேண்டும். அதற்கான வழிகளை உருவாக்கிக் கொள்வது கோயில் நிர்வாகிகளையே சாரும். அந்த வகையில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும், தேவஸ்தான நிர்வாகமும் முன் உதாரணமாகச் செயல்பட்டுவருவது மகிழ்ச்சியளிக்கிறது.

கோயிலின் வளர்ச்சியும் தெய்வப் பணிகளும் சிறப்புறநடைபெற்றுவரும் அதேவேளை கோயிலின் வாயிலாக சமூகப் பணிகளும் அங்கு மெச்சும்படியாக மேற்கொள்ளப்பட்டு வருவது கண்கூடு,

சாதிமத பேதமின்றி நோயாளிகளைப் பேணும் ஆஸ்பத்திரிகளுக்கு நன்கொடைகள், சமய ஸ்தாபனங்களுக்கு அனுதை இல்லங்களுக்கு நன்கொடைகள், பல்கலைக்கழக இந்து சமயபீடத்திற்கு நிதியுதவி, அகதிகள் புனர் வாழ்வுக்குதவி, மறைநூல்களை இலவசமாக வெளியிட்டுதவுதல் போன்ற பல்வேறு சமூகப் பணிகள் இந்தக் கோயிலின் பெயரால் இடம்பெற்று வருகின்றன. இவைகளுக்குச் சிகரம் வைத்தாற் போல், அநாதரவான சைவச்சிறுமிகளைப் பேணி வளர்ப்பதற்கான மாடிக் கட்டிடம் ஒன்றை துர்க்காபுரத்திலேயே இவர்கள் கட்டிமுடித்து அண்மையில் திறப்புவிழா நடத்தியுள்ளனர்.

சிறுமிகள் தங்கியிருக்கவும், கல்வி. தொழில் பயிற்சிகளைப் பெறவும் இங்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 16 லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள சகல வசதிகளும் கொண்ட இந்த விசாலமான மாடிக்கட்டிடத்தில் அறங்காவல் குழுவின் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது மணிவிழாவின் போது சேர்ந்த அன்பளிப்புகளில் ஒரு பகுதியை இங்கே ஒரு நூல் நிலையம் அமைப்பதற்கென்றே வழங்கியிருப்பதாக அறிகின்றோம்.

தெய்வீகப் பணியொன்றினைச் சிறப்புறச் செய்யும் ஒரு வாய்ப்பினைப் பெற்றுள்ள இவ்வம்மையார் அந்த வாய்ப்பின் வரப்பிரசாதம் சமூகத்தின் ஏனையவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் கருத்தாய் இருந்துவருவதையே இச்செயல் காட்டுகின்றது.

இவ்வில்லத்தில் தற்பொழுது 36 சிறுமிகளும், அவர்களைப் பராமரிப்பதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட சில பெண்களும் இருக்கிறார்களாம். இவர்களின் தொழில் வாய்ப்புக்கென மின்விசைத்தறிகளும், வேறு கைப்பணி முயற்சிகளும் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிகின்றது. காலப்போக்கில் இவ்வில்லம் மேலும் விரிவடைந்து நாடு தழுவிய அளவில் சைவச் சிறுமிகளின் பண்பாட்டு மையமாகத் திகழும் என்று நம்புகின்றோம்.

சோதனைமிக்க இக்காலத்தில் தமிழர்கள் ஈவிரக்கமின்றிக் கொலை செய்யப்படுவதனால் அநாதைகளாகிவிடும் நம் சகோதரச் செல்வங்களுக்கு இப்படியான இல்லங்களே உறுதுணை அளிக்கமுடியும்.

துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தின் முன்மாதிரி இன்னும் பல நிர்வாகங்களின் கண்களைத் திறக்கும் என்று நம்புவோம்.

## சட்ட விரோத மின் பாவனைக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''சட்ட விரோத மின் பாவனையால் உசன், மிருசுவில் கிராமங்கள் மிக விரைவில் இருளில் மூழ்கக் கூடும் இதனைத் தடுக்க உசன் சமாதான சபை தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று உசன் சமாதான சபை அண்மையில் கூடிய போது நிறைவேற்றப்பட்டது

சமாதான நீதிபதி திரு. வி. நடராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 200க்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## இலங்கை இனப்பிரச்னை பற்றி

# பி. பி. ஸி. வழங்கிய ஒரு சுவையான கருத்துரை

இலங்கையின் இனப் பிரச்னை பற்றியும் வடக்கு, கிழக்கில் அதிகரித்துவரும் வன்செயல்கள் பற்றியும் லண்டன் பி. பி. ஸி.யில் நேற்று முன்தினம் கருத்துரை ஒன்று நடைபெற்றது.

இதில் பி. பி. ஸி. லண்டன் அலுவலகத்தைச் சேர்ந்த லோறன்ஸ், ரூத் எவன்ஸ், பி.பி. ஸி. இலங்கை நிருபர் ஹம்ப்ரே ஹோக்ஸ்லி ஆகியோரும் பிரிட்டிஷ் சர்வதேசஉறவுகள் பேராசிரியர்ஒருவரும் கலந்து கொண்டனர். இலங்கை தேசிய பந்தோபஸ்துஅமைச்சர் திரு. அத்துலத்முதலி, தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரின் கருத்துக்களும் இதில் இடம் பெற்றன.

இக்கருத்துரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

### லோறன்ஸின் முன்னுரை

''இலங்கையில் தமிழர் அதிகமாக வாழும் வடக்-க் கிழக்குப் பகுதிகளில் வன்செயல்கள் அதிகரித்து வந்துள்ளன. அண்மையில் நடந்த மோதல்களின் போது சுமார் 80 தமிழர் உயிரிழந்துள்ளனர்.

''ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தமது சுதந்திரதினச் செய்தியில் இவ்வருட இறுதிக்குள் பிரிவினைக் கெதிரான யுத்தத்தில் வெற்றி பெறப்போவதாகக் கூறியிருக்கிறார்.

''சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னுல் இலங்கையின் பிரச்னைகளுக்குஒரு அமைதித்தீர்வுக் காணப்படலாம் என்ற நம்பிக்கைஒளிவீசியது. இலங்கையில் தமிழர் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களுக்குத் தனி நாடொன்றைக் கோரும் தமிழர் கோரிக்கைக்கும், இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையைப்பேண உறுதிகொண்டிருந்த இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் திரு. ராஜீவ் காந்தியின் அரசாங்கத்தினுல் ஒழுங்கு படுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் இப்பிரச்னையை தீர்த்துவைக்கக் கூடும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது.

''ஆயினும்ஜனாதிபதி ஜயவர்த்தனவின் இந்தச் செய்தியுடன் அந்த நம்பிக்கையும் அருகிவருகிறது.''

ஹோக்ஸ்லி: ''அவர் [ஜனாதிபதி] தனது செய்தியில் இவ்வருட இறுதிக்குள் பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்படும் எனஇலங்கையில் வாழும் சகல அமைதிவிரும்பும் மக்களுக்கும்உறுதி அளித்தார்.

''இக் கூற்று இலங்கைவாழ் தமிழர்களை சென்னையில் நிலைகொண்டுள்ள தமிழ் தீவிரவாதிகள் கூறியது போன்று இலங்கை அரசாங்கம் இனப்பிரச்னைக்குஇராணுவத்தீர்வொன்று காண முயலுகிறது என நினைக்கவைத்துள்ளது. அத்துடன் இலங்கை ஆயுதப்படைகள் பெரும் தாக்குதலொன்றுக்கு ஆயத்தமாகி வருகிறார்களெனவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். உண்மையில் இத்தகைய ஒருதாக்குதலை நடத்த ஏதுவாக இலங்கை ஆயுதப்படைகள் புதிய ஆயுத [illegible] துள்ளன.''

எவன்ஸ்: ''அத்துடன் கடந்த சில தினங்களாக இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வன்முறைகள் இடம் பெற்றுள்ளன''

ஹோக்ஸ்லி: ''ஆமாம்! கடந்த சில தினங்களாக கிளிநொச்சிப் பகுதியில் கடும் சண்டைகள் நடைபெற்றுள்ளன. சுமார் 50பேர் வரை அங்கு கொல்லப்பட்டுள்ளனர். இச்சண்டைகளில் பல அப்பாவித் தமிழர்கள் இடைநடுவில் அகப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. திருகோணமலைப் பகுதியிலும் சில மோதல்கள் இடம்பெற்றதால் சுமார் 30 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்.

''துரதிர்ஷ்ட வசமாக இம் மோதல்கள் இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வொன்றை காணமுயன்றுவரும் இந்தியவிசேடதூதுவர்தமது இலங்கைவிஜயத்தை கடைசிநேரத்தில் ரத்துச் செய்தபின்னரே இடம் பெற்றுள்ளன''

லோறன்ஸ்: ''அந்தவிசேட தூதுவர் வேறுயாருமல்ல, இலங்கையில் பிரச்னையில் சம்பந்தப்பட்ட இருபகுதியினரையும் பூட்டானில் கடந்த வருடம் பேச்சுவார்த்தைக்கு வரச்செய்வதில் பெரும்பங்காற்றிய இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி தான்''

தமிழில் தொகுத்து வழங்குபவர்:

### இ. செந்தில்

கேள்வி: ''திரு. பண்டாரியின் விஜயம் ஏன்கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது?''

பேரா: ''இதற்குரிய முக்கிய காரணமாக தோன்றக் கூடியது யாதெனில், ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கம், தமிழ் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கங்கண்டு வருவதன் மூலம் ஒரு வடக்கு - கிழக்கு பிரதேச சுயாட்சிமுறைக்கு இணங்கக்கூடும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது இப்போது இலங்கை அரசாங்கம் இந்த முடிவிலிருந்துமாறி இராணுவத்தீர்வொன்று காணுவதிலேயே குறிக்கோளாக நிற்பது போல் தோன்றுகிறது.

''இந்நிலையில் திரு பண்டாரியின் விஜயம் பயனற்றது என்றே நான் நினைக்கிறேன்''

### பகுதி II

திரு. அமிர்:- ''ஜனாதிபதி, தமிழ் மக்களிடையே உருப்பெற்றுள்ள இயக்கத்தை இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஒடுக்க நினைக்கிறார் என்றே நான் எண்ணுகிறேன் அவர் இதில் வெற்றி பெறுவாரா என்பது எனக்குத்தெரியாது. ஆனுல் ஒன்றுமட்டும் தெளிவு அவர் அரசியல் தீர்வில் நம்பிக்கை கொள்ளவில்லை. தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய எவ்வித நியாயமான தீர்வையும் ஒரு இணக்கம்காணப்பட்ட பேச்சுவார்த்தை அடிப்படையில் காணுவதற்கு இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை என நாம் உறுதியாகக் கூறுகிறோம்.''

லோறன்ஸ்:- ''இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வொன்றிலல்லாமல் இராணுவத்தீர்வொன்றிலா நம்பிக்கை கொண்டுள்ளது?''

லலித்:- ''இக்கேள்வி கேட்கப்பட்டவிதம் ஒரு பிழையான அர்த்தத்தை உண்டுபண்ணுகிறது உண்மை யாதெனில் பயங்கரவாதக் குழுக்கள் இந்தியா நிர்ப்பந்தித்திருந்தும்கூட எவ்வித அரசியல் தீர்வையும் முன்வைக்கவில்லை. மாருக அவர்கள் எமக்கெதிராகத் தாக்குதல்களை மேற்கொள்ளுகின்றனர். அவர்கள்சகல சமூகங்களைச் சேர்ந்த பொதுமக்களையும்கொலைசெய்கின்றனர். ஆயுத படைகளை தாக்குகின்றனர்.

''இந்நிலையில் எந்தளவுஅரசியல்பேச்சுக்களும், இவர்களின் இந்த இராணுவ அச்சுறுத்தலைச் சமாளிக்காது நாங்கள் எங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டியது எமது பணி:''

எவன்ஸ்:- ''அதாவது தற்போது வடக்கு, கிழக்கில் நடத்தப்படும் இராணுவ நடவடிக்கைகள் தாக்குதல் [Offensive] ரீதியிலன்றி சுயபாதுகாப்பு [Defensive] ரீதியிலா உள்ளன.''

லலித்:- ஆமாம்! இந்நடவடிக்கைகள் எங்கள்நிலைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும்மேற்கொள்ளப்படுகின்றன.''

### த. வி. கூ. ஆலோசனைகள்

அமிர்: ''இதுவரை அரசாங்கத்தினுல் எந்தவித ஒரு நியாயமான ஆலோசனையும் வைக்கப்படவில்லை

''நாங்கள் சமர்ப்பித்த நகல் திட்டத்தில் இலங்கையின் ஒரு பகுதியாக மொழி ரீதியில் அமைந்த ஒரு தமிழ் மாநிலத்தின் உருவாக்கம் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம் இந்திய யூனியன் அமைப்பிலுள்ள மொழிவாரி மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களில் பெரும்பாலானவற்றைஇவை கொண்டிருக்கும்.

லலித்:

''வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட முடியாது ஏனெனில் கிழக்கு வாழ் மக்கள் அதனை விரும்பவில்லை அத்துடன் கிழக்கில் 63 சத வீதமானோர் சிங்களவர்களும் முஸ்லிம்களுமாவர். அதாவது கிழக்கில் தமிழர் சிறுபான்மையினராகவே உள்ளனர்.

''ஆகவே இவ்விரு மாகாணங்களையும் இணைக்கக் கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆலோசனை எவ்விதஜனநாயக முறையும் இல்லாதது. எந்தப் பகுத்தறிவுள்ள அரசாங்கமும் இதனை ஏற்றுக்கொள்ளாது.''

## இந்திய நிலை

### லோறன்ஸ்

''த. வி. கூ. ஆலோசனைகள், ராஜீவ் காந்தியின் இந்தியஅரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தினுலேயே சமர்ப்பிக்கப் பட்டது. தமிழர்களுக்கு முழுமையான சுதந்திரததை (Outright Inde pend nce) வழங்க விரும்பாத ராஜீவ் தனது கௌரவத்தின் பெரும் பகுதியை இந்தப் பேச்சுவார்த்தைகளின் வெற்றியிலேயே அடகு வைத்துள்ளார்

''தமிழர் விடுதலைக் கூட்டணி, இனப்பிரச்னை சம்பந்தமாக இந்தியா இன்னமும் முக்கிய டங்காற்ற முடியும் என நம்புகிறது ஆயினும் இப் பிரச்னைக்கு சாத்வீக முறையில் தீர்வுகாண விரும்பும் தவி. கூ.

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப் பிரச்னை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய தமிழ் இயக்கங்கள் தங்கள் தீவிரவாத கொள்கைகளை நடைமுறைப் படுத்துவனால் மிகவும் காட்டிக் கொடுக்கப்படுகிறது.''

அமிர்:

''நாங்கள் இன்னமும் இந்திய அரசாங்கம் இப பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஒரு தீர்வைக் காணும் வரை காத்திருக்கிறோம். ஆயினும் அப்படி ஒன்றும் நடக்காவிடில் எமது விடுதலைக்கான போராட்டத்தை தீவிரப் படுத்த வேண்டி வரும்''

எவன்ஸ்:

''போராட்டத்தைத் தீவிரப்படுத்தல் பற்றிக் கூறும் போது நீங்கள் ஒரு ஆயுதப் போராட்டம் பற்றியா குறிப்பிடுகிறீர்கள்?''

அமிர்:

அமிர் ''எமதுகூட்டணிஒருதீவிரவாத இயக்கமல்ல வன்முறையற்ற காந்தியின்போராட்ட முறைகளையே நாங்கள் பின்பற்றி வருகிறோம்.''

எவன்ஸ்:

''ஆனல் மறுபுறத்தில்ஏனைய தமிழ் இயக்கங்கள் இத்தகைய சாத்வீகக் கொள்கைகளைக் கடைப் பிடிப்பதில்லை. அவர்கள் மேல் உங்களுக்கு கட்டுப்பாடு உண்டா?''

அமிர்: ''இல்லை! அவர்கள் தங்கள் வழிகளில் இந்தப் போராட்டத்தை நடத்துவார்கள் எங்களால் அதனைத் தடுக்க முடியாது.''

## 99 வீதமானோர் ஆயுதபாணிகள் அல்ல

அமிர்: ''நான் நினைக்கிறேன் 99 வீதமான தமிழர்கள் ஆயுதபாணிகளல்ல வென்று அவர்களால் ஒரு ஆயுதப்போராட்டத்தில் பங்கேற்க முடியாது அதனல் அவர்களை (மக்களை) நாங்கள் சாத்வீக மக்கள் போராட்டத்துக்கு வழி நடாத்திச் செல்ல வேண்டும்''

## மார்க்ஸிஸம் பற்றி

லலித்; சகல பயங்கரவாதக் குழுக்களும் மார்க்ஸிஸமொழியை உபயோகிக்கின்றன அத்துடன் சிலர் ஏனைய நாடுகளிலுள்ள மார்க்ஸிஸக் குழுக்களிடம் பயிற்சியும் பெற்றுள்ளனர், மேலும் உலக ரீதியில் பயங்கரவாதச் சம்பவங்களுடன் சம்பந்கப்பட்டுள்ள சில நாடுகளிடமிருந்து உதவிகளும் பெற்றுள்ளனர்.''

அமிர்: ''இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கத்தின் கைகளினல் இனப் படுகொலையை எதிர்நோக்கியிருக்கும் ஒரு ஒடுக்கப்பட்ட இனத்தவர் ஆவர். அவர்கள் அவர்கள் தங்கள் உரிமைகளை பெற்றுக் கொள்ளவும் தங்கள் வாழ்வை நிச்சயப்படுத்திக்கொள்ளவும் போராடுகிறார்கள் இதுதான் உண்மை நிலைமேற்கத்தைய நாடுகளின் அனுதாபத்தைப் பெறும் பொருட்டேஇலங்கை அரசாங்கம் இவ்வியக்கம் ஒரு கம்யூனிச இயக்கம் எனப் பிரச்சாரம் செய்துவருகிறது. தமிழர்களில் பெரும்பான்மையினோர் தங்கள் விடுதலையிலேயே ஆர்வமாயிருக்கின்றனர், மார்க்ஸிஸத்தில் அல்ல.''

லோறன்ஸ்:

''பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்கவேண்டுமாயின் அவர்களை எதிர்த்துப் போராடுவதற்கு ஆயுதப்படைகளிடம் மிகுந்த மனவலிமைவேண்டும்.''

லலித்:

இலங்கை ஆயுதப்படைகளின்மனவலிமை எப்போதுமே நல்ல நிலையிலேயே இருந்துள்ளது. ஆரம்பத்தில்எல்லா ஜனநாயக நாடுகளைப் போலவே நாங்கள் பலவீனமாயிருந்தோம். ஏனெனில் நாங்கள் இந்த பயங்கரவாத அச்சுறுத்தலை உதாசீனம்செய்தோம். அத்துடன் ஒரு ஜனநாயக அரசாங்கத்தினல் இதனை சமாளிக்குமுடியும் என எண்ணினேம். பின்னர் இந்த அச்சுறுத்தல் விஸ்வரூபம் எடுப்பதைக் கண்டு: நாட்டின் அபிவிருத்திக்குப்பயன்படக்கூடிய மூலதனத்தை இராணுவத்தைப் பலப்படுத்துவதற்குப் பாவிக்கிறேம். இந்த இராணுவப் பவப்படுத்தல் சிலகாலத்துக்கு முன்னல் ஆரம்பித்து இப்போது பலனைத்தர ஆரம்பித்துள்ளது.

''நாங்கள் ஆயுதங்களைப் பணம்கொடுத்தே கொள்வனவு செய்கிறேம், யாரும் நன்கொடையாக இதை எங்களுக்குத் தருவதில்லை. இவ்வாயுதங்களை நாங்கள் பல்வேறு இடங்களிலிருந்து அவ்வவர்களின் ஆயுதங்களின் பலனை மதிப்பீடு செய்தபின்னர் கொள்வனவு செயகிறேம்.

''இம்மாதிரியான பிரச்னைகளுக்கு [இனப்பிரச்னை] இராணுவத் தீர்வே உகந்தது என நாம் நினைக்கவில்லை. ஆனல் இந்தப்பயங்கரவாதக் குழுக்கள் வெளிநாடுகளில் தளங்களுடன் வெளிநாடுகளின உதவியுடன் நவீன ஆயுதங்களைக் கொண்டு எங்களைத் தாக்கும் போது எங்களுக்கு அவர்களுடன் சண்டை பிடிப்பதைத தவிரவேறு வழியில்லை',

லோறன்ஸ்: ''இந்நிலையில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்து தமிழர்கள் கொல்லப்படுதல் நாளுக்குநாள் அதிகரித்துவரின் இந்திய அரசாங்கத்தினல் வாளாவிருக்க முடியுமா?''

பேரா: ''திரு காந்தி மிகவும் இக்கட்டான நிலையில் சிக்கியுள்ளார். தமிழர்க்கெதிரான இனப்படுகொலைகள் அதிகரிக்குமாறு ஏதாவதொரு நடவடிக்கையை மேற்கொள்ள அவர் நிர்ப்பந்திசகப்படுவார். மறு புறத்தில் தமது அண்டை நாடுகளுடன் நெருங்கிய நட்புறவை வருப்பும் திரு. காந்தி இந்தியாவின் தலையீடு எனத்தோன்றும் எந்த ஒருநடவடிக்கையையும் எடுக்கத் தயங்குகிறார்.

''சிலர் இலங்கையிலுள்ள தற்போதைய நிலையை 71ம் ஆண்டில் பங்களாதேஷின் நிலையுடன் ஒப்பிடுகிறார்கள். ஆனல் இவையிரண்டும் வேறுவேறான நிலைமைகள் என்றே நான் கருதுகிறேன்.

''பங்களாதேஷ் நிலையைப் பொறுத்தவரை இந்தியாவெங்கும், பாகிஸ்தான் பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தே நிலவியது. ஆனல் தமிழர் பிரச்னையைப் பொறுத்தவரையில் இது தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் தான் பிரசித்தபெற்றுள்ளது. இதனல் இலங்கை பிரச்னையில் தலையிடுவதின் (நேரடியாக) மூலம் அவர் ஒரு கணிசமான அரசியல் லாபத்தை சம்பாதித்து விடமுடியாது.

''ஆனல் மறுபுறத்தில், இலங்கை ஜனதிபதி எச்சரித்தது போன்று தமிழர்க்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை அதிகரிப்பாரேயானல் எவ்வளவு காலம் திரு காந்தியினல் இப்பிரச்னையில் நேரடியாக தலையிடாமல் இருந்துவிட முடியுமென்பதை நிச்சயமாகக் கூறமுடியாது.


## கடைசிநேர வரிவிளம்பரம்

## தேவை

பாண் பேக்கரிக்கு நல்ல அனுபவம் வாய்ந்த பேக்கர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். இந்திரா பேக் ஹவுஸ், பாலாவோடை சந்தி, காரைநகர். (C-613)

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
சிவாஜி—வாணிஸ்ரீ
புண்ணிய பூமி

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
அலைகள் ஓய்வதில்லை

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
நெஞ்சிருக்கும் வரை


# ஹெலிக்கொப்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடைசெய்வதில் விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

வயல்களில் காவல்காரர்கள் கூட இல்லாததால் அதிகமான வயல்களில் கால்நடைகளும், பறவையினங்களும் நெற் திர்களை நாசம்செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் பூவரசங்குளத்துக்கும் சாலந்தைக்குளத்துக்கு மிடையில் ஆறும்சட்டையில் இந்தக் கண்ணிவெடித் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதனல் ராணுவத்தில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனல் சரியானவிபரம் தெரியவில்லை. பூவரசங்குளம் சென்ற ஆறு டிரக் களும் திரும்பி வந்துள்ளன.

இதேசமயம் கண்ணிவெடிச் சம்பவத்தையடுத்து ஹெலிகொப்டர் மூலம் நெல்லுக்குளம், ஊமாங்குளம், பூவரசங்குளம் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது. சேதங்கள் பற்றிய விபரம் தெரியவிலலை. டிராக்டர் ஒன்றின் மீது துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டுள்ளபோதிலும் அதிலிருந்தவர்கள் காயமின்றித்தப்பியுள்ளனர் இலுப்பைக்குளத்தில் அநாதரவாக நின்றவான் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் வவனியா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து மக்கள்பீதியடைந்துள்ளனர். கடைகள் யாவும் இழுத்துமூடப்பட்டன.

# பாப்பரசருக்கு ..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பகுதிகளிலுமிருந்தும் ஆறுலட்சத்துக்கும் அதி மான பக்தர்கள் குழுமியிருந்தார்கள்.

இவ்வைபவத்தில் பரிசுத்த பாப்பரசர் பேசுகையில் உலக சமாதானத்தையும், வறுமையையும் மையமாகவைத்துப் பேசினர். பாப்பரசர் தமது பேச்சில் இடையிடையே தமிழில் பேசியபோது மக்களின் கரகோஷம் வானைப்பிளந்தது. மக்களின் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் ஆறுக ஓடியது. இதைக்கண்ணுற்ற பாப்பரசர் உணர்ச்சிமிக்கவராய் பின்வரும் வசனங்களை உரத்த குரலில் தமிழில் பேசினர்:

''இறைவா உன்னை எல்லா மக்களும் போற்றட்டும்! அன்பார்ந்த மக்களே தமிழ்நாடு தலைப்பட்டணத்துக்குவந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் வாழ்வின் கலை, கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டது இந்தியா'' என்று கூறினர்.

இவ்வைபவத்தில் பரிசுத்த பாப்பரசருக்கு, இந்தியாவில் பிரபல்யம் வாய்ந்த சத்தோலிக்க ஆலயங்களின் சின்னங்கள்பொறித்த மரத்தினல் செய்யப்பட்ட கேடயம் ஒன்றும், தமிழ்நாடு அதிமேற்றிராணியாரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டைவிட்டு பரிசுத்தபாப்பரசர் புறப்படும்போது முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரனை கட்டித்தழுவ ஆசீர்வதித்தார், பாப்பரசருக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளும் அன்பளிப்புச் செய்யப்பட்டது

பாப்பரசர் ஒருவர் தமிழ் நாட்டுக்கு விஜயம்செய்திருப்பது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

# தமிழர் கூட்டணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கை இனக்கலவரங்களுக்கு அரசியல் தீர்வுகாண இந்த முன்னணி தெரிவித்த யோசனைகளைப் பொறுத்தவரை இலங்கை அரசின் போக்கில் மாறுதல் எதுவும் இல்லாதது குறித்து வியப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இ தொ. கா. அலுவலகத்தின் மீது நடந்த தாக்குதலையும் கூட்டணி வன்மையாக கண்டித்திருக்கிறது. (ச)

# கண்டெடுக்கப்பட்ட பணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகக் கட்டிடப் பகுதியில் வீழ்ந்து கிடககக் காணப்பட்ட சிறுதொகைப் பணம் யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் கண்டெடுக்கப்பட்ட இச்சிறு தொகைப் பணத்துக்குரியவர் வரும் 11ம் திகதிக்குமுன் விபரங்களைக்கூறி தம்மிடமிருந்து இப்பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என அரச அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

# காயமடைந்தோர்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதேநேரத்தில் கிளிநொச்சி துப்பா கிசூட்டுக்கு இலக்கான சிலர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மிகவும்ஆபத்தானநிலையில் கொண்டுவரப்பட்ட இராசா அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். மற்றும் எஸ். ரி. வின்சர் (53 வயது), வி. சி. காசிநாதன் (54வயது கிளிநொச்சி, ரூபன், கிளிநொச்சி ஆகியோரும் நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

# பருத்தித்துறை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்தும் பதற்றம் நிலவி வருகின்றது. பருத்தித்துறை நகரத்திலும் அண்மித்த கிராமங் ளிலும் வசித்துவந்த மக்கள் இரவோடிரவாக பாதுகாப்புத் தேடிஇடம்பெயர்ந்துள்ளனர். பருத்தித்துறை நகரம் வெறிச் சோடிக்கிடக்கின்றது. கடைகள், சந்தைகள், வங்கிகள், அனைத்தும் மூடப்பட்டுள்ளன; தும்பளை வீதியிலும், மருதடியிலும் சந்தைகள் கூடியிருந்தன். நகரிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அச்சத்தின் காரணமாக மாணவர்கள் செல்லவில்லை. மினி பஸ்சேவைகள் மருதடியிலிருந்து ஆரம்பமாகின்றன. இ. போ, ச. பஸ் சேவைகள் பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிககப்படுகின்றன. பருத்தித்துறை நீதிமன்றங்களும் இயங்கவில்லை.

# மஹர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் மேற்படி வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததாகக்கூறப்படுகின்றது.

படுகாயமடைந்த திரு. ஜெயக்கொடி கொழும்பு பெரியாஸ்பத்திரி தீவிர சிகிச்சைப் பிரிவில் அறுவைச் சிகிச்சைக்குப் பின் தேறிவருவதாக அறிவிக்கப்படுகின்ற அதேவேளையில், படுகாயமுற்ற இரைது வாகனச் சாரதி கொழும்பு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் மேலும் சொன்னர்.

''சமாதானத்தை விரும்பும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை சோவியத் மக்கள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள். இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களிலே சோவியத் யூனியன் ஒரு போதும் தலையிடாது. இலங்கையின் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு நவீன ஆயுதங்களை ரஷ்யா வழங்கிவருகிறது என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார். இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்குத் தமது அரசாங்கம் எந்தவித விளம்பரத்தையும் அளிக்கவில்லை என்றும் அவர் கூறினர்.

''சில முக்கிய சர்வதேசப் பிரச்னைகளில் இரு நாடுகளும் ஒரே வித கொள்கையைக் கொண்டுள்ளன. சமாதானத்தை ஏற்படுத்தும் போராட்டம்; அணுவாயுதப் போராட்ட அச்சுறுத்தல்; அணுவாயுதப் போட்டியை ஒழித்துக்கட்டல்; இந்துசமுத்திரத்தை சமாதான பிராந்தியமாகப் பிரகடனம் செய்தல் என்பன அவற்றுட் சில வாகும்

அணுவாயுத உற்பத்தியை நிறுத்தவேண்டும் என்ற சோவியத்தின் ஆலோசனை பற்றி அவர் குறிப்பிடுகையில், ரஷ்யாவும், அமெரிக்காவும் ஏனைய நாடுகட்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்றார். [ச]

## ரூபவாஹினி

பெப்ரவரி 07 வெள்ளி மாலை

5-00 செய்திகள்.
5-95 விஞ்ஞானம் (சிங்களம்)
5-30 கார்ட்டூன் நிகழ்ச்சி
6-00 வண்ணத்திப்பூச்சித் தீவு
6-30 செய்திகள்(தமிழ்)
6-55 வாத்திய விருந்து
7-25 குரங்கு அத்தி-6
8-00 செய்திகள் (சிங்களம்)
8-20 குரங்கு[தொடர்ச்சி]
9-00 செய்திசள் (ஆங்கிலம்)
9-25 'டேட்லைன்'
9-45 வார இறுதித் திரைப் படம்
11-25 ஒளிபரப்பு முடிவு.


இன்றைய எமது
புதிய வெளியீடுகள்

பாண்டியன், நளினி, கவுண்டமணி நடித்த
1. ராஜகோபுரம் (PYRAMID)
ரஜனிகாந்த் மாறுபட்ட வேடத்தில் நடித்த
2. ஸ்ரீ ராகவேந்திரர் (PYRAMID)
சிவாஜி, ரேவதி நடித்த
3. மருமகள் (தரமான பிரதி)

வீடியோ பிரசாத்
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A-209]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதவி அரசாங்க அதிபர் பிரிவுதோறும் வர்த்தகர்கள் சங்கம்

[சுண்டுக்குளி]

சகல மாவட்டங்களிலுமுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் வர்த்தகர்கள் சங்கம் அமைக்கப்படவேண்டுமென்று வர்த்தகக் கப்பற்துறை அமைச்சினால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வர்த்தக அமைச்சுடன் பதிவு செய்யப்படவேண்டும்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் ஒரே ஒரு சங்கம் மாத்திரம் இருத்தல் வேண்டுமென்றும் சங்கங்கள் ஏற்கனவே இருக்குமானால் அவை பதிவு செய்யப்படலாமென்றும் அவை செயலிழந்திருந்தால் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்படல் வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது, இது சம்பந்தமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுமுள்ள உள்நாட்டு வியாபாரப்பிரிவு பரிசோதகர்கள் நடவடிக்கைஎடுத்துவருகிறார்கள்.

இது குறித்து மேலும் தகவல்களைப் பெறவிரும்பும் வர்த்தகர்கள், உள்நாட்டுவியாபார உதவி ஆணையாளர் அல்லது உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்குப் பொறுப்பாயிருக்கும் உள்நாட்டு வியாபார பரிசோதகர்களுடன் தொடர்புகொள்ளலாம்.

## இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபையில் சிறுப்பராகக் கடமையாற்றிய திரு. கே. நகுலானந்தன் யாழ் மாநகரசபைக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். யாழ். மாநகரசபையில் சிறுப்பராகக் கடமையாற்றிய திரு. எஸ், சோதிநாயகம் பருத்தித்துறை நகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வருடாந்த உற்சவம்

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 15 ம்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் இவ்உற்சவத்தில் 9ம் நாள் ரதோற்சவமும் 10ம் நாள் மாசிமகத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்

பிரம்மஸ்ரீ க. மு. ஜெகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் உற்சவத்திற்கான ஏற்பாடுகளை பரிபாலன சபைத்தலைவர் திரு. நா. சுவாமிநாதன், செயலாளர் திரு. செ இராசரத்தினமும் கூட்டாகச் செய்து வருகின்றனர். [ச]

## இன்றைய பலன்

மாதம்- தை
திகதி-25 [1986-3-7]
கிழமை- வெள்ளி
திதி- திரயோதசி முற்பகல் வரை
நட்சத்திரம்- உத்தராடம் பி.இ வரை

மேடம்; மாதுரு வழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம்போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு

இடபம்; இதயத்தில் மகிழ்ச்சிவெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழிலிலும் வெற்றியுண்டு.

மிதுனம்: வயிற்றுக் கோளாறு தோன்றக் கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம் வேண்டும். எதிரிகளுக் காத்திருப்பர்.

கடகம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கிடமுண்டு காதலர் வாழ்வில்தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும். பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர்.

சிங்கம்; சிரித்துப்பேசியவர்கள் இன்று சீறிவிழுவார்கள். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக்கொள்ள நேரிடும்.

கன்னி: பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கிடமுண்டு. புண்ணிய காரியங்களை மனம் நாடும். நீண்ட நாள் மனக்குறையம் நிவர்த்தியாகும்.

துலாம்: வெற்றிப் பாதையில் வீறு நடைபோடுவீர். தொழிற்றுறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிர்ப்புக்களும் ஏற்படும்.

விருச்சிகம்; வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தியேற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவும் உண்டு.

தனுசு: எதிர்பாராதவகையில் பொருள் விரயயாகும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும். சிந்தையிலே குழப்ப நிலைதோன்றும்.

மகரம்: எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும் எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாலாம். உடல்நலமும் குன்றும்.

கும்பம்: என்றும்போல வாழ்வு மலரும். சமூகத்தில் மதிப்புயரும். நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள்.

மீனம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு. இனபந்துக்களால் தொல்லையுமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

# 300 சட்டவிரோத மின் இணைப்பு துண்டிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். அபிவிருத்திச்சபை கோப்பாய் உப அலுவலக எல்லைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பாவித்தோரது இணைப்புக்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எஸ். கருணைநாதன் தலைமையில் அப்பகுதி பொதுஸ்தாபன பிரதிநிதிகள் பொதுமக்கள் உதவியுடன் இரண்டாவது தடவையாகத் துண்டிக்கப்பட்டது.

சுமார் 300 க்கும் அதிகமான மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதுடன் இணைப்புக்களுக்கு உபயோகிக்கப்பட்ட தந்திக்கம்பிகள் மின்வயர்கள் தனிக்கம்பிகள் கோப்பாய் சந்தியில் பகிரங்கமாக எரிக்கப்பட்டது,

இதனால் சிறிது நேரம்போக்குவரத்தும் தடைப்பட்டது.

இதுபோன்று தொடர்ந்து பகல் இரவு நேரங்களில் துண்டிப்புக்கள் நடைபெறுமெனவும் சட்டவிரோதமின்பாவனையாளர் பூரண ஒத்துழைப்பு வழங்காவிடில் கோப்பாய் பகுதிக்கான மின்விநியோகம் முற்றாகத் தடைப்படுமெனவும் சட்டவிரோத மின்பாவனையாளர் களது இலவச மண்ணெண்ணை முத்திரைகள் ரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனவும் அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்

## கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

(சுன்னாகம்)

இளைஞர் முற்போக்கு மன்றத்தினர், விழிப்புக்குழுக்கள் போன்ற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, கிராமங்கள் தோறும் சென்று கசிப்பு உற்பத்தி செய்வதை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடவுள்ளனர்.

இளைஞர் முற்போக்கு மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கோட்டைக்காடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் திரு க. செல்வநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டத்தில் கிராமங்கள் தோறும் ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: மு. கணேசலிங்கம் உபதலைவர் எ. கந்தசாமி, செயலாளர்: சு. தேவராசா துணைச் செயலாளர்: க. சிவகுமார், பொருளாளர்: செ. மகேந்திரம், இயக்குனர்கள்: பொ. ஸ்ரீரஞ்சன், க. செல்வநாயகம். மேலும் 2? நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (மா)

## வவனியா மாவட்ட கிராமோதயசபைத் தலைவர்கள்

[வவனியா]

இந்தஆண்டிற்குரியவவனியா மாவட்ட புதிய கிராமோதய சபைத்தலைவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது. விபரம்வருமாறு;

சேமமடு எஸ். அமிர்தலிங்கம், ஓமந்தை ஐ கனகையா, ஆடுவெந்தபிலவு கே அருள்ராஜா, இராமசந்திரகுளம் கே, சீனிவாசகம், நெடுங்கேணி பீற்றர் பொன்கலன், மாமடுவ ஆர், புஞ்சிபண்டா, நெளுக்குளம் என். சேனாதிராஜா, ஈரற்பெரியகுளம் எம். குலத்திலக, பெரியஉலுக்குளம் எஸ். வீரக்கோன், ஆண்டியாபுளியங்குளம் ஜனுப் எம். ஆப்தீன், கனகராயன்குளம் ஏ சிவசுப்பிரமணியம், புளியங்குளம் கே. விஞசித்தம்பி, முதலியாகுளம் ஜனுப் நஜிமுதீன்' மடுக்கந்த பி விமலானந்த, வவனியா நகரம் கே. லோகசிங்கம், புதுக்குளம் பி, பத்மநாதன், ஆசிகுளம் எஸ். வையாபுரிநாதன், பரந்தன் எஸ். நித்தியபவானந்தன், பெரியபுளியாலங்குளம் என். விஜயராஜா.

ஊஞ்சால்கட்டி, பூமமடுவ கிராமோதய சபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை என்று உள்ளூராட்சி திணைக்களஉதவி ஆணையாளர் திரு. பி. கமலநாதன் தெரிவித்தார்.

# வவனியாவில் கைதானோர்விபரம்

[வவனியா]

ஜீப்வண்டியில் கொண்டு வரப்பட்ட 'தலையாட்டிமர்ம மனிதன்' மூலம் வவனியா நகரில்வைத்து கைதுசெய்யப்படும் இளைஞர்களின் தொகை அதிகரித்து வருகிறது. கைதான சில இளைஞர்கள் விபரம்:

து. பாஸ்கரன் [தச்சன்குளம்], எஸ்.செல்வமனோகரன் [தோகிலுப்பைக்குளம்], கு. கமலானந்தன் [கோவில் புதுக்குளம்], வரதன் [நெளுக்குளம்], எஸ், இராஜரட்ணம் [அரச ஒப்பந்தகாரர், நெளுக்குளம்], யோகன் [நெளுக்குளம்]. எஸ்.சின்னராசு [வடாகைச்சாரதி], சகாப்தீன் [பட்டாணிச்சி புளியங்குளம்], ஜெகன் [தேங்காய்வியாபாரி], ஆர். லோகராஜா [கந்தசாமி கோவிலடி], லோகேஸ்வரன் [வவனியா],

வவனியா தமிழ் மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவனை ஐ. யசோதரனும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களுடன் வேறுபலரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## விவசாயிகளின் கஷ்டம்

[வேலணை]

வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும், விலை அதிகரிப்பு காரணமாகவும் மிகுந்த கஷ்டமடைந்துவருகிறார்கள்.


தரத்தில் உயர்ந்த
அணில் ஐஸ்கிறீம்
CUPS, FAMILY BLOCKS,
GALLONS, PLASTIC PACKS
(Gift item)
நிர்ணயிக்கப்பட்ட விலைகளில்
எம்மிடம் பெறலாம்.
SHOBAS SHOPPING CENTRE
603, K. K. S. Road, Jaffna.
(நாவலர் சந்திக்கருகே)
(A 199)



DIPLOMA IN PHARMACY
பாமஸி வகுப்புக்கள்
யாழ் நகரில் முதல் முதல்
பாமஸிப் பயிற்சி பலவருட அனுபவம் உள்ள
தராதரம் பெற்ற ஆசிரியர்கள்
செய்முறை பயிற்சி
நவீன முறையில் விரிவுரைகள்
★ ஆயுள்வேத டாக்டர்கள்,
★ தனியார் வைத்தியசாலை
★ வெளிநாடு செல்பவர்கள்
★ மருந்து விற்பனர்கள்
★ அரசாங்க வெளிவாரி பாமஸி சோதனை எடுப்பவர்களுக்கும்
வசதியாக விரிவுரைகள்.
சனி - ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் -
வாரநாட்கள் வகுப்புக்கள்
ஆரம்பம்: 8-2-1986 காலை 8-30 a. m
உங்கள் பதிவுகள் இரண்டு கிழமைக்குள் மட்டுமே
ஏற்றுக்கொள்ளப்படும்.
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, St. PETERS LANE, (Opp: O. L. R. CHURCH),
HOSPITAL ROAD, JAFFNA.
(A 203)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனலைதீவு நல்லிணக்க சபை

[யாழ்ப்பாணம்]

அனலைதீவு மக்கள் நல்லிணக்கசபை உறுப்பினராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு நா. தில்லையம்பலம், செயலாளர் திரு. வ பரம்சோதி, உப செயலாளர் சி குலசிங்கம், பொருளாளர் ப. நடராசா, ஏனைய உறுப்பினர் திரு. கு. கந்தசாமி, அ நமசிவாயம், ஐ பொன்னம்பலம், சி. வைத்தியநாதி, வே. பொன்னம்பலம், ஐ. செல்லையா, வ. நாகன், மு. குமாரசாமி, சு. வீரவாகு.

## தொல்புரத்தில் மரம் நாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

தொல்புரம் மத்தி சன சமூகநிலையம், வாசிகசாலை ஆதரவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் தொழிலதிபர் திரு க. கனகராசா [ஜே.பி) தலைமையில் மரம் நாட்டு விழா சிறப்பாக நடைபெறவுள்ளது

தொல்புரம் மத்தி சனசமூக நிலைய மைதானம், கொட்டடிப்பதி ஆதி முத்துமாரி அம்மன் ஆலயம், இந்து இளைஞர் மன்றம், அ மி. பாடசாலை, சர்வோதயக் காணி உட்பட தொல்புரத்திலுள்ள பல்வேறு பொது நல ஸ்தாபனங்களிலும் மரங்கள் நாட்டப்படவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச பொதுச் செயலாளரும் தொல்புரம் மத்தி இந்து இளைஞர் மன்ற உப தலைவருமாகிய திரு. எஸ் எஸ் வரதராசா மேற்கொண்டுள்ளார். [ச]

### 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி பரம்சோதி ஸ்ரீபத்மநாதன்**

**மலர்வு: 17-07-1929**

**உதிர்வு: 08-01-1986**

அன்பின் ஜோதியே! பாசத்தின் சிகரமே! எம்மையெல்லாம் தவிக்கவிட்டுத் திடீரென மறைந்துவிட்ட அன்புத் தெய்வமே உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தோன்றிய செல்வங்கள் ஏங்குதம்மா, தோன்றுயோ மீண்டும் என்று வாடுதம்மா

அன்னாரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

**கணவன். பிள்ளைகள்.**

25, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (C 574)

## ஈசனுக்கு அஞ்சலி

(முல்லைத்தீவு)

இராணுவத்தினரால் நிலக்கடலைப் பண்ணையில் கடந்த மாதம் 2-ம் திகதி சுட்டுக் கொலைசெய்யப்பட்ட ஈசனுக்கு (விக்கினேஸ்வரன்) 'விடுதலைப் புலிகள்' அஞ்சலி தெரிவித்து சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

## கலைவாணி சனசமூக நிலையம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சடையாளி கலைவாணி சனசமூக நிலையத்தின் 1986-ம் ஆண்டு நடப்பு வருட நிர்வாகிகள் வருமாறு:- தலைவர்: ந. புவனச்சந்திரன், உப தலைவர்: வே. கிருஷ்ணசாமி, செயலாளர்: க. மகேந்திரராசா, உப செயலாளர்: மா. லோகேஸ்வரன, பொருளாளர்: என். கே. கந்தசாமி. உப பொருளாளர்: ந. யோகீஸ்வரன், போஷகர்கள்: க. தேவராசா, திருமதி கோ. குணசேகரன், கணக்காய்வாளர்கள்; சி. மகேந்திரம், செல்வி மா. கோகிலா.

இத்துடன் பதினைந்து பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர் சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ)

வலிகிழக்கு வடபகுதி
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி

### கூறு விலைமூலம் விற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் கூறுவிலைமூலம் விற்பனை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. எமது சங்கத்தின் 24 ஸ்ரீ 5355 இலக்க இசுசு 5 தொன் லொறியில் பொருத்தப்பட்டிருந்த போணட் செட் [முழுதாக.]
2. எமது சங்கத்தின் 24ஸ்ரீ 5355 இலக்க இசுசு 5 தொன் லொறியில் பொருத்தப்பட்ட மர கூட் பொடி.
3. லொறியிலிருந்து கழற்றப்பட்ட 825x20-8 டயர்களும் 750x20-2 டயர்களும்.
4. லொறியில் இருந்து கழற்றப்பட்ட றேடியேற்றர் கோஸ் இரண்டு [இசுசு லொறிக்குரியது.]

மேற்கூறப்பட்ட வகை பொருட்கள் நல்ல நிலையில் உள்ளன. இவற்றிற்கான விலையினை [பெறுமதியினை] தனித்தனியாக பதிவுத்தபால் மூலம், கடிதத்தின் உறையின் மேல்பக்க இடதுபக்க மூலையில் பொருளின் விபரம் அதாவது தனிப்பொருளின் பெயர் எழுதி, தலைவர், வலிகிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், இராஜ வீதி, அச்சுவேலி என்ற முகவரிக்கு 15-2-86-ந் திகதி சனிக்கிழமை பி ப. 3-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். பொருளைப் பார்க்க விரும்புவோர் சங்க வேலை நாட்களில், சங்கக் காரியாலயத்திற்கு வந்து அறிந்து கொள்ளவும். கூறுவிலை விண்ணப்பத்தை நீங்களே தயாரிக்கவேண்டும்

அத்துடன் மேற்படி சங்கத்தில் வெற்றுபரல் [பாவித்தது] ரூபா 75/- [சில்லறையாகவும், மொத்தமாகவும்] வேலைநேரத்தில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
[A 197]

## ஆஸ்பத்திரி குழு வெற்றி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை உப அலுவலக விளையாட்டுக் கழகத்துக்கும், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் ஆஸ்பத்திரிக் குழு வெற்றியீட்டியது.

காங்கேசன்துறையில் நடந்த இப்போட்டியில் ஆஸ்பத்திரிக் குழு 1—0 என்ற வித்தியாசத்தால் வெற்றிபெற்றது.

## பால் உற்பத்தியில் அதிக கவனம்

(கொழும்பு)

''பால் உற்பத்தி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவற்றில் தன்னிறைவடைய முழு மக்களினதும் பங்கேற்பு அவசியம்'' என்று கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறினார்.

லிபிய உதவியுடன் அமைக்கப்பட்ட வென்னப்புவவில் கோழிப்பண்ணை ஒன்றை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''எனது அமைச்சு, பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்காக பல சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியுடன் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டங்களினுல் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் பெருகுவதுடன், உற்பத்தியாளர்களின் வருமானமும் பெருகும். ஆயினும் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைய பொதுமக்களின் பங்கேற்பும் அவசியம். எனது அமைச்சு பால் உற்பத்தியில் ஈடுபட விருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் தயாராயுள்ளது.'' என்றும் அமைச்சர் கூறினார்.

லிபிய வெளிநாட்டு முதலீட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. ஒத்மான் டேர்கியும் உரையாற்றினார்.

### 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சீவரத்தினம் தம்பிராசா**

**தோற்றம்: 14-09-1912**

**மறைவு: 08-01-1986**

எங்கள் குடும்ப விளக்காய் பிரகாசித்த அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டகன்ற நாட்கள் முப்பத்தொன்று நான்றும் நாம் உங்கள் நினைவாக உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி,
சகோதரர்,
பெருமக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் தெற்கு.

## இப்படியும் நடக்கிறது

தொலைபேசியில் ஸ்ரீமான் பொதுஜனம் பேசினர்.

''...கச்சேரி நல்லூர் வீதியிலிருந்து பேசுகின்றேன்...'' என்று தனது இருப்பிடத்தைக் குறிப்பிட்டு...

''அது சரி, போன நாலாம் திகதி றேடியோ கேட்டீர்களா...?'' என்றூர்.

''அன்று ஓய்வு நாள்தானே. சும்மா கேட்டேன்...'' என்றேன்.

''இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளில் முப்பத்தெட்டாவது சுதந்திரதின வர்ணனை இடம் பெற்றுக்கொண்டிருந்தது. வர்ணனையாளர் கூறுகிறூர்... ''இன்று இலங்கை மாதாவுக்கு மரியாதையாக இருபத்தொரு பீரங்கி வேட்டுக்கள் காலிமுகத்திடலில் இப்பொழுது தீர்க்கப்படுகிறது. பீரங்கி வேட்டுக்களின் சத்தங்களை இப்பொழுது நீங்களும் கேட்கலாம்...''

இப்படிக் கூறிய ஸ்ரீமான் பொதுஜனம்—

''இருபத்தொரு பீரங்கி வேட்டுக்கள் அங்கு—அவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறைதான் கேட்டும். எமக்கு..... தினம் தினம் முழக்கங்கள் மனித உயிர்ப்பலிதானே...!'' என்று சொல்லிவிட்டு 'தொப்' என்று தொலைபேசியை வைத்துவிட்டார்.

''ஊடுருவி''

## பாலர் ஞானோதய சபை ஆண்டு விழா

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை அதன் 39 வது ஆண்டு விழாவை இன்றும் நாளையும் கொண்டாடுகிறது. சிவகடாட்சக்குருக்கள் அரங்கில் நடைபெறும் இவ் விழாவின் முதல் நாளான இன்று வெள்ளிக்கிழமை 4 மணிக்குக் காசி விநாயகப் பெருமானுக்கு விசேஷ பூசையுடன் விழா ஆரம்பமாகும். தொடர்ந்து மாணவர் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.

2 வது நாளான நாளை சனிக்கிழமை காலை கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம் பெறும். தலைமை உரையைத் தொடர்ந்து சமய மாணவர் இசை நிகழ்ச்சியும் இடம் பெறும்-

பிற்பகல் நிகழ்ச்சிகள் 3 மணிக்கு இளைப்பாறிய இராமநாதன் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சகிதேவி கந்தையா தலைமையில் நடைபெறும். மாணவர் இசை நிகழ்ச்சி, நாட்டிய நிகழ்ச்சி, பரிசளிப்பு நிகழ்ச்சி முதலியன இடம்பெறும்.

## புங்குடுதீவில் சண்டிகாஹோமம் இலட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சண்டிகாஹோமமும் இலட்சார்ச்சனையும் இம்மாதம் 15ம் திகதி ஆரம்பமாகவுள்ளது, தொடர்ந்து 24 ம் திகதி வரையுள்ள 10 தினங்கள் சண்டிகாஹோமம், இலட்சார்ச்சனை சங்காபிஷேகம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாசிமக தினத்தன்று பிற்பகல் அம்பாள் ஊர்வலம் வழமை போல் நடைபெறும். நிகழ்ச்சிகள் நயினை பிரதம குரு பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். சர்வசாதகர்: மட்டுவில் பிரதிஷ்டாவித்தகர் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள்.

[வேலணை]

எதிர்வரும் 9 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் அகதிகள் நிவாரணப் பணிகளுக்கென நிதி வசூல் செய்வதற்கு ''பொன் மாலைப் பொழுதினிலே'' என்னும் கலை நிகழ்ச்சி ஒன்று நடைபெறவிருக்கிறது.

குடும்பப் பெண்களே!

உங்கள் நாளாந்த வீட்டுத் தேவைகள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற வருகை தாருங்கள்!

ஷோபாஸ் ஷொப்பிங் சென்ரர்

★ தரமான பொருட்கள் ★ நியாயமான விலைகள்

Also available: BROILER, CURRY CHICKEN, FISH, ANIL ICE CREAMS, LP GAS.

வீட்டு விநியோக சேவை:

உங்கள் வசதி கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவை மூலம் உங்கள் தேவைகள் யாவற்றையும் வீட்டிலிருந்தபடியே பெறலாம். மேலதிக கட்டணமில்லை. 3 மைல்களுக்குள் வசிப்பவர்களாயின், இன்றே எம்முடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெறுங்கள்.

Dyn. Ads

SHOBAS SHOPPING CENTRE
603, K. K. S. Road, Jaffna.
(நாவலர் சந்தி அருகே)

(A 205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# கோட்டை தாக்குதல்: பிரிகேடியர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றியுள்ள பொறுப்புள்ள மக்கள் அப்பாவிப் பொது மக்கள் அழிவுக்குள்ளவதைத் தடுக்க விவேகத்துடன் செயல்படவேண்டும்''

இவ்வாறு யாழ். இணைப்பதிகாரி பிரிகேடியர் எச். எவ். ரூபசிங்க விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''இம்மாதம் 3ம்திகதி இரவு தீவிரவாதிகள் கோட்டை முகாமை மோட்டர் கொண்டு தாக்கினர். எவ்வித ஆத்திர மூட்டலும் நடக்காத வேளையில் கோட்டையைச் சுற்றி வாழும் மக்களிடையே சேதங்களை ஏற்படுத்தவும் பிரசாரத்துக்காகவுமே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

''பெரும்பாலான குண்டுகள் தாறுமாறாக ஏவப்பட்டன. அதிர்ஷ்டவசமாக இப்பகுதி மக்களிடையே வீண் சேதங்கள் ஏற்படவில்லை. ஆனால் படையினர் அப்பாவி மக்களின் உயிர்பாதுகாப்புக் கருதி மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டனர்.

''ஸ்தாபனங்களும், மக்களும் இப்பகுதி பொதுமக்களின் பாதுகாப்புக் கருதித் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ஆலோசனைகள் சமர்ப்பிக்கவும் வரவேற்கப்படுகிறார்கள்.''

---

திடீர் சத்தத்தைத் தொடர்ந்து

# சிலர் வீதியில் விழுவதைக் கண்டேன்!''

## பருத்தித்துறை சம்பவம் பற்றி தகவல்

(புலோலி)

''நான் மீன்சந்தை வீதியில் முட்டை வாங்கிக்கொண்டு நிற்கும் போது ஏதோ திடீரென்ற சத்தமொன்று கேட்டது. நான் நிமிர்ந்து பார்த்த போது சிலர் வீதியில் விழுந்ததைக் கண்டேன். அவ்வேளையில் எனது தொடையிலிருந்து இரத்தம் பீறிட்டது நான் தொடையைக் கையால் பிடித்துக்கொண்டு ஓடினேன்.''

இவ்வாறு பருத்தித்துறை நகரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பருத்தித்துறையைச் சேர்ந்த வி. நாராயணன் (வயது 70] தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

''நான் பருத்தித்துறைச் சந்தையில் வாழைப்பழம் வாங்கிக்கொண்டு முட்டைவாங்குவதற்காக மீன்சந்தைப்பக்கம் சென்றேன் மீன்சந்தை வீதியில் முட்டையை வாங்கிக் கொண்டு முட்டைக்காரனிடம் காசைக்கொடுத்துக் கொண்டிருந்தேன். திடீரென. ஏதோ ஒரு சத்தம் கேட்டது நான் நிமிர்ந்து பார்த்தபோது சிலர் கீழே விழுந்தார்கள். அதே நேரம் எனது தொடையிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது.

---

# மரண அறிவித்தல்

### திருமதி தையலம்மை நமசிவாயம்

நயினாதீவு 7-ம்வட்டாரத்தைச் சேர்ந்த தையலம்மை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விசாலாட்சி, விசுவலிங்கம், செல்லம்மா, நாகரெத்தினம், அன்னலெட்சுமி, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, நாகராசா, காலஞ்சென்ற சண்முகம், பொன்னையா, அன்னம்சாதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 7-02-86 இன்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் நான்கு மணிக்கு நயினாதீவு சல்லிவரவை மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C 619)

### திருமதி அன்னம்மா நடராசா

செட்டித்தெரு பருத்தித்துறையைச் சேர்ந்த காலம் சென்ற கணபதிப்பிள்ளை நடராசாவின் அன்பு மனைவியும், காலம் சென்ற நவரத்தினராசா (யாழ். ஐக்கிய வியாபார சங்கம்), கனகராசா (தெல்லிப்பளை மாவட்ட ஆஸ்பத்திரி), சண்முகராசா (யாழ். ஐக்கிய வியாபார சங்கம்), சிவகடாட்சம் (கலால் திணைக்களம் பருத்தித்துறை), அழகராசா (ஜெனரல் என்ஜினியரிங் சேர்விஸ் கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி மனோன்மணி நவரத்தினம், சிவசவுந்தரம் கனகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகவன், சுதர்சன், கார்த்தியாயினி ஆகியோரின் பேத்தியாரும், திருமதி இராமலிங்கம் இராசம்மா, மாரிமுத்து, நல்லம்மா, கனகலிங்கம், திலகவதி, அப்பாத்துரை, கண்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர். அன்னரது ஈமைக்கிரியைகள் (6-2-86) வியாழக்கிழமை ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெற்றது. தகவல்: மக்கள், மருமக்கள் (C 608)

---

# ஐக்கியத்தை வலியுறுத்தி 'ரெலோ' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''ஒடுக்கு முறைகளைப் பல்வேறுவடிவங்களில் விஸ்தரித்து வரும் இனவாத அரசுக்கு எதிராக மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராடவேண்டியது அவசியமாகும். இதற்கான ஆரம்ப நிலையே ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் ஒருங்கிணைப்பாகும். ஆனாலும் சில ஸ்தாபனங்கள் இணைப்பை நிராகரித்து தமது ஆளுமைகளை நிலைநாட்ட முற்படுவது வேதனைக்குரியது.''

'தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ''(ரெலோ) விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் தமது இயக்கத்துக்கும், தோழமை இயக்கம் ஒன்றுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிரச்னை சம்பந்தமாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''ஈரோஸ் தோழர் ஒருவர் உட்பட மூவரை கொள்ளைகள் தொடர்பாக விசாரணை செய்ய முயன்ற எம் தோழர்கள் மூவர் ஈரோஸ் இயக்கத்தினரால் தாளையடிவட்டையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் செயலையடுத்து ஈரோஸ் முகாமுக்குள் உட்புகுந்த எம்மால் எம்தோழர்கள் மீட்கப்பட்டதுடன், ஈரோஸ்தோழர்கள் மூவர்விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டனர். விசாரணை முடிவில் ஈரோஸ் தோழர்கள் மூவரும் விடுதலை செய்யப்பட்டன் எமது முகாமுக்குள் உட்புகுந்த ஈரோஸ் தோழர்கள் பதினறு பேரைக் கைது செய்ததுடன் மேலும் எட்டுப்பேரையும் கைது செய்தனர். இதற்குப் பின் ஈரோஸ் இயக்கத்தினரின் பாதுகாப்பில் இருந்து தப்பி வந்த நம்தோழர்கள் நால்வரும் மிகவும் கேவலமான, மிருகத்தனமான முறையில் கத்தியாலும், சைக்கிள் செயினாலும் தாக்கப்பட்டுள்ளனர். ஒருவர் மிகவும் ஆபத்தானநிலையில் தற்சமயம் உள்ளார். அத்துடன் தொடர்ந்தும் எம் தோழர்களால் பதினெட்டுப் பேரினதும் ஆயுதங்களும் ஈரோஸ் வசமே உள்ளன.

''இவ்வாறு கேவலமான முறையில் ஈரோஸ் தோழர்கள் ஆளுமை செய்ய முற்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்- இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இயக்க வாதங்களை மேலும் வளர்க்காது ஒன்றிணைந்து போராட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கூட்டமைப்பை வலுப்படுத்தக்கூடிய பொதுவேலைத் திட்டங்களை முன்னெடுப்பது அவசியமானது. மக்களுக்கு எதிராகச் செயற்படும் சக்திகளை நிராகரித்து மக்களின் விடுதலைக்கு ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே மக்களின் விடுதலை கூடிய விரைவில் மீட்டெடுக்க முடியும்.'' [மா]

---

# 'இடைக்கால தமிழ்பேசும் மக்கள்சபை' அமைப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணத்தில் நேற்று இடைக்கால தமிழ்பேசும் மக்கள் சபை ஒன்று அமைக்கப்பட்டது இதற்கான நடவடிக்கைக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடந்த இக்கூட்டத்தில் வெகுஜனத்தொடர்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். பதின்மூன்று தொழிற்சங்கங்களைக்கொண்ட வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழுவினரும் கலந்துகொண்டனர் இந்த நடவடிக்கைக் குழுவில்அன்னையர் முன்னணி, யாழ். பிரஜைகள் குழுவினர், முஸ்லிம் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள். நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசநிறைவேற்றுத்துறை, உள்ளூராட்சி நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அடங்கியுள்ளனர். 13ம் திகதி நடைபெறவிருக்கும்போராட்ட வடிவம் பற்றி இந்த நடவடிக்கைக்குழுமுடிவு செய்யவுள்ளது.

---

# மார்ச் மாத தபாலக ஓய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

மார்ச் மாதத்துக்குரிய தபாலக ஓய்வூதியம் இம்மாதம் 17-ம் திகதி முதல் வழங்கப்படும்.

17-ம் திகதி யாழ்ப்பாணம், கொக்குவில், தெல்லிப்பழை.

18-ம் திகதி- பருத்தித்துறை, வயாவிளான், காங்கேசன் துறை, ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு.

19-ம் திகதி - கொடிகாமம், கரவெட்டி, வல்வெட்டித் துறை, சுழிபுரம்.

20-ம் திகதி- சுன்னாகம், உரும்பராய், கோப்பாய், வண்ணார்பண்ணை

21-ம் திகதி- சாவகச்சேரி. வட்டுக்கோட்டை, மானிப்பாய், கைதடி

25-ம் திகதி- அளவெட்டி, அச்சுவேலி, காரைநகர், வேலணை, சங்கானை

26-ம் திகதி- நெடுந்தீவு அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, யாழ்ப்பாணம்.

---

புங்குடுதீவில் நடந்தது

# ஆர்ப்பாட்ட ஊர்வலமும் கொடும்பாவி எரித்தலும்!

(வேலணை)

இலங்கை சுதந்திர தினத்தைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும் கொடும்பாவி எரிபபும் புங்குடுதீவு மக்களால் நடத்தப்பட்டன.

புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தையடியில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தென்னிலங்கைத் தலைவர்களின் கொடும்பாவிகள் பாடைமீது வைத்து புங்குடுதீவின் பிரதான வீதிவழியாக இழுத்துச் செல்லப்பட்டு மயானத்தில் வைத்து எரிக்கப்பட்டன.

புங்குடுதீவு முற்ற வெளி மைதானத்தை ஊர்வலம் அடைந்தபோது அங்கு பொதுக்கூட்டமொன்று நடைபெற்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டது.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

[1] தமிழ்ப் பிரதேசங்களில் விற்பனையாகும் அதிர்ஷ்ட லாபச்சீட்டுக்கள் அனைத்தையும் தமிழ்மக்கள் நிராகரிக்கவேண்டும்.

[2] தென்னிலங்கையில் உற்பத்தியாகி விற்பனைக்கு விடப்பட்டுள்ள சவர்காரங்கள் உட்பட பல உற்பத்திப் பொருட்களையும் பகிஷ்கரிப்பதுடன் அதற்கீடான உற்பத்தி முயற்சிகளை ஊக்குவித்து ஆதரிப்பது.

[3] உள்ளூர் கைத்தறி நெசவு ஆடைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றை வாங்கிப் பாவிக்க மக்கள் முன்வருதல் வேண்டும்.

[4] உள்ளூர்தோறும் பொது ஸ்தாபனங்கள் மேற்கொள்ளும் சிவில் நிர்வாக மாற்றீட்டு முறைகளை ஏற்றுக் கொள்ளுவது.

[5) ஆடம்பரமற்ற முறையில் விருந்து வைபவங்கள், கோவில் திருவிழாக்களை நடத்துவது; அகதிகளாக வந்திருப்போர்களுக்கு உதவுவது.

[6] பொது வேலைத்திட்டங்களின்கீழ் இயக்கங்களின் ஒற்றுமையை வலியுறுத்தலும் மக்கள் மத்தியில் அவற்றைப் பகிரங்கப்படுத்த கோருவதும் மேற்படி தீர்மானங்கள் பொதுமக்களின் ஏகோபித்த கரகோஷங்களோடு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

---

# வெகுஜனக் கூட்டுக்குழு இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயச் சட்டம், விமானத் தாக்குதல் மற்றும் இராணுவக் கெடுபிடிகளுக்கு எதிராக மானிப்பாய் பிரதேச வெகுஜனக்கூட்டுக்குழு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை இன்று காலை நடத்தவுள்ளது.

மானிப்பாய் பிரதேச விழிப்பு மன்றம் இவ்வூர்வலத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கிராமம் கிராமமாக நடைபெறும் மக்கள் போராட்டத்தின் ஒரு கட்டமாக இந்த ஊர்வலம் நடாத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை எட்டு மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மானிப்பாய் ஆலடிச்சந்தி, ஆனைக்கோட்டைச் சந்தி, நவாலி சந்தி, நவாலி வடக்கு டச்றேட், கட்டுடைச் சந்தி, சண்டிலிப்பாய் சந்தி வழியாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடையும்.

ஊர்வலம் அங்கு சென்றடைந்ததும் உதவி அரசாங்க அதிபரிடம் ஊர்வலத்தினர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்கள்.

இவ்வூர்வலத்தில் மானிப்பாய் பிரதேசத்திலுள்ள 21 அமைப்புகள் கலந்து கொள்ளவுள்ளன. [மா]

---

# கப்பல் கொள்ளை 14 பேர் கைது

(கொழும்பு)

பாணந்துறை கடல் பிராந்தியத்தில் கடந்தவருடம் நடைபெற்ற கொள்ளைகள் தொடர்பாக 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுமார் பத்து மாதங்களுக்கு முன்னர் பாணந்துறை கடற் பிராந்தியத்தில் தரித்து நின்ற 'லங்கா சுமிலா' என்ற கப்பலிலிருந்து கொள்கலங்களை உடைத்து வெடி மருந்துகள், தோட்டாக்கள் ஆகியவை களவாடப்பட்டது தெரிந்ததே! இது தொடர்பாக இந்த திணைக்களம் குற்றப் புலனாய்வுத் துறைமுகப் பொலிஸாரும், பாணந்துறை பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதல் வேட்டையின் போது கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் 'எமலீன் மெரீனு' 'கிறீட்கிறெட்' ஆகிய கப்பல்களில் நடந்தகொள்ளைகளிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறதாம்.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org